G. D. Naidu Page 6-9

BUSINESS VOICE வியாபாரக் குரல்

20-11-69

ஆண்டு மலர்

Phone. Office: 3538. Tel: "VEECOFABS"
Resi. 4401

வெள்ளி விழா ஆண்டு.

"வீகோ" REGD
சேலைகள்

கோவை கைத்தறி ஆடைகள்

ஒருதடவை உபயோசித்தவர்கள்

"வீகோ" சேலைகளையே விரும்புகிறார்கள்

நாணயமான நெசவு உள்ளவை!

அழகிய கலர்கள் உள்ளவை!!

பலவித நவீன பார்டர்களில்

சாதா, பல்வேறு கொட்டடிகள் டோரியா, தினுசுகளை கைதேர்ந்த
நெசவாளர்களால் தயார் செய்யப்பட்டவை.

VEECO PRODUCTS

உபயோகித்தவர்கள்

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவரும், எல்லா வியாபாரிகளும்,
வீகோ ஆடைகளின் சிறப்பைப் பற்றியே பேசுகிறார்கள்.

உற்பத்தியாளர்கள்:

கே. எஸ். வீ & கோ,

கைத்தறி (நவீன) சேலைகள் உற்பத்தியாளர்கள்

கோயம்புத்தூர்.

அழகிய வேலைத் திறன்மிக்க

பொன் & வைர நகைகளுக்கும்

வெள்ளிப்பாத்திரங்களுக்கும்

சிறந்த இடம்

P.A. ராஜா செட்டியார் & பிரதர்

ஸ்வர்ணமாளிகை

கோயம்புத்தூர் - 1

போன் : 22668 தந்தி : ராஜா

தபால்பெட்டி :

கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்

பதிவு அலுவலகம்: ஜவஹர் பஜார், கரூர்

தமிழ் நாட்டில் பிரதான இடங்களில் 45 கிளைகளுடன் பணி புரிந்து வருகிறது.

சென்னைக் கிளை: 456 - 457 தங்கசாலைத் தெரு, மதராஸ் 3

24-10-69 தேதியில்

அதிகாரம் பெற்ற மூலதனம் :	ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் :	ரூ. 12,54,000
ரிசர்வுகள்	ரூ. 14.40,000
டிபாசிட்டுகள்	ரூ. 7,46,90,000
மொத்த வரவு செலவுகள்	8 கோடிக்கு மேல்.

பிக்சட் டிபாசிட்டுகள் :	மூன்று மாத கெடுவிலிருந்து 10 வருட கெடு வரையில் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் 7 % வரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
சேவிங்ஸ் கணக்கு	4 சத விகிதம் வட்டி. வாரம் ரூ. 3000/- வரை செக் மூலம் பெற வசதியுண்டு.
மாதாந்திர டிபாசிட்டுகள்	தவணைக்கு ஏற்றவாறு 7 சத விகிதம் வட்டி அளிக்கிறது.

சகல பாங்கு வரவு செலவுகளும் நடத்தப்படும். விவரங்களுக்கு ஏதாவதொரு கிளையில் தெரிந்து கொள்ளலாம்.

கரூர்.
31-10-69.

C. ராமநாத செட்டி
செக்ரடரி.

ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள் !
அதையே தான்
விரும்புவீர்கள் !!

பி. எம். எஸ். சோப்.

ஆடைகளை
வெண்மையாக்குகிறது.

பி. எம். எஸ். சோப் ஒர்க்ஸ்,
காரைக்கால்.

தாங்கள் அளித்துவரும் ஆதரவே
. எங்கள் சிறந்த சேவைக்குக்
காரணமாகும்.

டயம்பீஸ், அலாரம் டயம்பீஸ்
வால் கிளாக்குகள், ரேடியோக்கள்,
முதலானவை சகாய விலையில்
கிடைக்கும்.

குறித்த காலத்தில், கெடியாரங்
ரிப்பேர் செய்து தருகிறோம் ரேடி
யோக்கள் பழுது பார்ப்பதற்கும்
ஒலி பெருக்கி அமைப்பதற்கும்,
தகுந்த இடம் :

சாமி வாட்சு கம்பெனி
& பாண்டியன் ரேடியோ
சர்வீஸ், நெ. 1-ஏ பெரிய தெரு
கும்பகோணம்

With the best complements from,

...
...
—
...
...

A. M. P. Thiyagarajan,

A. M. P. K. & BROS,

BURMAH SHALL AGENTS,

Trichirapalli.

முல்லங்கி காபியையே உபயோகியுங்கள்

அது சோர்வை நீக்கி
சுறுசுறுப்பூட்டுகிறது !

அயர்வைப் போக்கி
ஆனந்தமளிக்கிறது !!

தயாரிப்பாளர்கள் :

முல்லங்கி காபி ஒர்க்ஸ்
நாகப்பட்டினம்

GOOD SERVICES AND FAIR DEALING

...

...

...

From

DE-LUX PHOTO SERVICE,

PHOTOGRAPHERS AND DEALERS

102, Dindugal Road,

KARUR.

For *DURABILITY ELEGENT AND SMART WEAR*

Insist on "TEMPLE BRAND BANIANS"

Specialities: OPERA· SAFIRE SOFTEX SUPER "A"

MANUFACTURERS

THE KARUR KNITTING COMPANY

660, Bazzar Street,

KARUR.

Tel: TEMPLE Phone. 299

உரிமை

தனது என்று உரிமை கொண்டாடுதற்கில்லாது எதையுமே கொண்டிராமல் புனித ஜீவராசிகளுள் இவ்வுலகின்கண் யாருமே இல்லை எதிலுமே பற்றற்ற நிலையோடு முற்றிலும் துறந்து வனாந்திரங்களில் சுற்றித்திரியும் துறவிகளாயினும் அவர்களும் "தன்னது" என்ற உரிமையோடு சில பொருள்களைக் கொண்டுதான் இருக்கிறார்கள் உடுத்தும் ஆடையும் அன்றி நடப்பதற்கு உடன் கொண்டிருக்கும் நெடுங், கோலும் தன் உபயோகத்திற்கு வைத்திருக்கும் கமண்டலமும் தன் சொத்தாக உரிமை கொண்டாடுகிறார்கள் ஐந்தறிவு படைத்த மிருகங்களுங் கூட 'தன்னுடையது' என்ற உரிமை உணர்வு உள்ளவைகளாய்தான் இருக்கின்றன எஜமான விஸ்வாசமுள்ள நாய் தன்னை போஷித்துவளர்க்கும் எஜமானர் எஜமானிமீது உரிமையோடு பழகுகிறது அறிமுகமில்லாதவர் யாரையும் தான் இருக்கும் வீட்டினுள் அனுமதியாது தனக்குள்ள உரிமையை அது ஸ்தாபிப்பதை காண்கிறோம்

ஊர்வன, பறப்பன, போன்ற எல்லா இனங்களும் ஒவ்வொன்றின் மீது உரிமையுள்ளவைகளாய் இருக்கின்றன

உலக வாழ்க்கைக்குத் தேவையானவைகளைத் தேடிக்கொள்வதில் எத்தனையோ போராட்டங்களுக்கு இணைந்து கொடுக்கவேண்டியிருக்கிறது போட்டி பொறாமை, அசூயை; எத்தனையோ குறுக்கீடுகளுக்கெல்லாம் ஈடுகொடுத்துத்தான் மாந்தர்கள் பொருள் சேர்க்கிறார்கள் பொருள் சேர்ப்பதில்; மாந்தர்கள் அனைவருமே ஒரே சீராக பொருள் தேடக் கூட முடிகிறதில்லை.

வசதியுடன் வாழ்க்கை நடத்துபவர்களைப் பார்த்து தாமும் அந்நிலை அடையவேண்டும் என்று எண்ணுவார்களேயானால் அது தவறல்ல. ஆனால் அவ்வெண்ணம் சிலருக்கே கூடிவருகிறது

பொருள் சேர்த்து, சிலரைப்போல பெருவாழ்வு நடத்த மாந்தர்கள் எடுக்கும் முயற்சியில் பெரும்பாலோர் தோல்வியே காணுகின்றனர் சீரான உடல் வலுவும் சமமான வயதும் உடைய இருவரிடம் ஒரே வகையான வேலையை ஒப்படைத்தால் அவ் வேலையின் செய்திறன் அதனை செய்வதற்குப் பிடிக்கும் காலஅளவு இவைகளில் இருபாலரிடையே வித்தியாசத்தை காணமுடிகிறது

உலகியல்பு இவ்வாறு இருக்கும் போது முழுமையும் பொது உடமை என்னும் கருத்தைச் செயல்படுத்த முடியுமா? ஒருவர் தேடிய செல்வத்தின் மீது அவருக்குள்ள உரிமைக்கு என்றுமே எந்நிலையிலும் பாதுகாப்பு வலுவாக இருந்தால் தான் மக்கள் வாழ்க்கையில் நிம்மதி காணுவார்கள்

சிறு தொழில் வளர்ச்சி.

தொழிலதிபர். ஸ்ரீ ஜி. டி. நாயுடு, கோயம்புத்தூர்.

தமிழ்நாட்டில் சில தொழில்கள் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன சிறு தொழில்கள் வளர்ச்சியால்தான் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் "பரவாயில்லை" என்று சொல்லும் அளவுக்கு முன்னேறிக்கொண்டிருக்கிறது 1960-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவில் ஒரு சில சிறு தொழில் அதிபர்களே இருந்தார்கள்- ஆனால் இன்று 10, 125 சிறு தொழிலதிபர்கள் இருப்பதாக சிறுதொழில் அதிபர்கள் பதிவேட்டில் இருந்து தெரிந்து கொள்கிறோம். எட்டு ஆண்டு காலத்தில் இவ்வளவு பேர்கள் தொழில் தொடங்கியது ஒரு மகத்தான சாதனையே. பதிவு செய்து கொண்டவர்களைப் போல பதிவு செய்து கொள்ளாமல் தொழில் நடத்தி வருபவர்கள் எண்ணிக்கை இதைப்போல இரண்டு, மூன்று மடங்கு அதிகம் இருக்கும் என்று நம்பலாம்.

அரசாங்க உதவி.

மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில் மட்டும் சிறு தொழில்கள் வேகமாக வளர்ச்சி அடைந்ததற்கு தமிழ் நாடு அரசாங்கத்தின் ஆதரவும் உதவியும்தான் காரணம். சிறு தொழில் நடத்துபவர்களுக்கு அரசாங்கம் ரூ. 3கோடி வரை கடன் உதவி செய்துள்ளது வெளிநாட்டிலிருந்து மூலப்பொருள்களை இறக்குமதி செய்து கொள்வதற்காக பலருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் ரூ. 3 கோடி மதிப்புடைய மூலப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இரும்பு, உருக்கு ஆகியவைகளை நியாய விலையில் வாங்கிக் கொடுக்கிறது குறைந்த செலவில் மின்சாரம் கொடுக்கப் படுகிறது தொழில் பேட்டைகளைக் கட்டி அவைகளில் சிறு தொழில்களுக்கு என்று இடம் ஒதுக்கி ஆலோசனையும் ஒத்துழைப்பும் கொடுத்து தொழில்களை வளர்ச்சி அடைய ஆவன செய்து வருகிறது.

தொழில் பேட்டை.

சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக தமிழ்நாட்டில் 23 தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் 491 459-ல் தொழில்கள் நடந்து வருகின்றன 9 சதவிதம் பல்வேறு காரணங்களால் இயங்கப்படாமல் இருக்கின்றன. இவைகளிலும் பல விரைவில் இயங்கப்பட்டுத் தொடங்கும் என்று நம்ப இடம் இருக்கிறது கிண்டி, அம்பத்தூர், மதுரை திருச்சி, காட்பாடி, ஈரோடு, தஞ்சை, மார்த்தாண்டம், அரக்கோணம், மாதவரம், கோவை ஆகிய இடங்களில் உள்ள தொழில் பேட்டைகளில் இடம் கேட்டு விண்ணப்பம் அனுப்பியவர்களில் 200 பேர்களுக்கு இடம்கிடைக்கவில்லை என்று.

தெரிய வருகிறது ஆகவே இனியும் புதியது புதியதாக தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்கவேண்டும் அதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசாங்கம் செய்யும் என்று நம்பலாம்

என்ன காரணம்?

பலர் சிறு தொழில்கள் நடத்த முன் வருகிறார்கள். அதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். சிலர் ஒரு குறிப்பிட்ட தொழிலில் தொழில் நுணுக்கமும் அனுபவமும் பெற்றவராக இருக்கிறார்கள் தங்கள் திறமையையும் அனுபவத்தையும் நம்பியே இவர்கள் தொழில் நடத்த வருகிறார்கள் தொழிற்பேட்டையில உள்ள 530 தொழிற்சாலைகளில் 367 தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களால் நடத்தப்படுகின்றன சிலருக்குத் தொழில் நுணுக்கம் தெரிந்த மகன்களோ அல்லது உறவினர்களோ இருக்கிறார்கள் இப்படிப் பட்டவர்களின் திறமையைப் பயன் படுத்துவதற்காகவும் சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்படுவது உண்டு. வெளி நாட்டு இறக்குமதியை நம்பி இருக்கும் சில வியாபாரிகள் இறக்குமதியில் சிக்கல் வரும்போது தங்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவும் சிறு தொழில்களை தொடங்குவது உண்டு தொழிலில் நல்ல வளர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் தொழில் தொடங்குபவர்களும் உண்டு.

பல துன்பங்கள்.

சிறு தொழில்களைத் தொடங்கி நடத்துவதில் பல துன்பங்கள் இருக்கின்றன என்பதை தொழில் நடத்தாதவர் கூட அறிவார்கள். சிறு தொழில்கள் நடத்துவதற்கு அரசாங்கமும் பாங்கியும் கடன் கொடுத்து உதவுகின்றன இயந்திரங்களை வாங்கிக்கொண்டு கடனைத் தவணை முறையில் செலுத்துவதற்காக சிறு தொழில் கார்ப்பரேஷன் உதவி செய்கிறது இவைகளில் உள்ள அதிகாரிகளைக் கண்டு பேசி விண்ணப்பம் கொடுத்து பணம் பெறுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன கடன் கிடைப்பதில் பல சிரமங்கள் இருப்பதால் பலர் சிறு தொழில் தொடங்குவதில் உள்ள ஆர்வத்தையே விட்டு விடுகின்றனர். மற்றும் இவைகளால் தொழில் நடத்துவதற்கு வேண்டிய அளவு கடன் கொடுத்து உதவிசெய்ய முடியவில்லை பணம் பற்றாக் குறையினால் எதையும் துணிந்து செய்ய முடியாத நிலை; இது தொழிலுக்கு பெரும் இழப்பாகும் சிறு தொழில்களுக்கு கடன் வசதியளிக்க அரசாங்கம் தன்னால் முடிந்த அளவுக்கு தாராளமாக நடந்து கொள்ள வேண்டும்.

விற்பதில் சிரமம்.

பெரிய தொழிற்சாலைகள் தங்கள் மொத்த வருமானத்தில் 3 அல்லது 5 சத வீதத்தை விளம்பரத்திற்காக செலவழிக்கிறது 15 முதல் 25 சத வீதத்தை விற்பனையைப் பெருக்குவதற்காக செலவிடுகிறது இதுபோலவே சிறு தொழில் செய்பவர்களும் செய்ய முடியாது அவ்வாறு செய்வதும் அவர்களுக்கு லாபகரமாக இருக்க முடியாது ஆகவே சிறு தொழில் அதிபர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதில் பல சிரமங்கள் உள்ளன பொருள்களை விற்பனை செய்வது விஷயமாக அரசாங்கம் போதிய ஆர்வம் எடுத்துக்கொள்ளவேண்டும் சிறு தொழிற்சாலைகளில் உற்பத்திசெய்த பொருள்களை அரசாங்கமே தொழில் வர்த்தக கார்ப்பொரேஷன் மூலமாக மொத்தமாகவாங்கி அவைகளை விற்பதற்கான ஏற்பாட்டை

செய்யவேண்டும் இது பொது மக்களும் ஒத்துழைக்கவேண்டும். அவர்களும் சிறு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப் படும் பொருள்களையே வாங்கி உற்சாக மும் ஊக்கமும் கொடுக்கவேண்டும்

தனி மனிதன்.

சிறு தொழில்களைத் தொடங்கி நடத்தும்போது ஒரு தனிமனிதன் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியவனாக இருக்கிறான். பொருள்களை உற்பத்திசெய் பவராகவும் விற்பனையாளராகவும் நிர்வா கியாகவும் விற்பனையாளராகவும் பணம் தேடுபவராகவும் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்பவராகவும் இருக்கிறார் அவருடைய பெரும்பால நேரம் நகரசபை அலுவலகத்திலும் பாங்கி அதிகாரிகளைப் பேட்டி காண்பதிலும் அரசாங்க அதிகாரி களை அணுகுவதிலும் மூலப் பொருள்களை வாங்குவதிலும் உற்பத்தி செய்த பொருள் களுக்கு மார்க்கெட் பிடிப்பதிலுமே கழி ந்து விடுகிறது ஆகையால் தொழிலில் போதிய கவனம் செலுத்தி தரம் மிக்க பொருள்களை உற்பத்தி செய்ய முடியாமல் போய் விடுகிறது தொழில் செய்பவரே எல்லா இடங்களுக்கும் போய் எல்லா வே லைகளையும் கவனிப்பதால் சிறு தொழில் கள் திறமையாகவும் லாபகரமாகவும் நடக்காமல் போய்விடுகின்றன

ஒரு தனி மனிதன் எல்லா வேலை களையும் செய்து முடிக்கும் திறமைசாலி யாக விளங்க முடியாது அப்படியே இருந் தாலும் எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்து முடிக்கப் போதிய நேரம் கிடைக் காது தொழில் அறிவு பெற்றுள்ள ஒரு வருக்கு வியாபார அறிவு இல்லாமல்இருக் கலாம் வியாபார விஷயமாக பலதும் தெரிந்த ஒருவருக்கு தொழில் அறிவு இல் லாமல் இருக்கலாம் ஒரே மனிதன் எல்லா வேலைகளையும் பார்க்காமல் வேண்டியஒத் துழைப்புகளைக்கொடுக்க மேல் நாடுகளில் சிறு தொழில் ஆலோசனைக் கழகங்கள் இருக்கின்றன அதுபோலவே நம் நாட் டிலும் உடனடியாக சிறுதொழில் ஆலோ சனைக் கழகங்கள் ஏற்படவேண்டியது அவசியமாகும் ஆலோசனைக் கழகம் தொடங்குவதற்கு அரசாங்கம் திறமை யான அதிகாரிகளையும் நிதி உதவியை யும் கொடுத்து உடனடியாகச் செய்ய வேண்டும்

வேலை வாய்ப்பு.

தமிழ் நாட்டில் உள்ள சிறு தொ ழில்களின் நிலையான மதிப்பு ரூ. 56 கோடிக்கும் அதிகமாகும் சிறு தொழிற் சாலைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட் டுள்ள பொருள்களின் மதிப்பு ரூ. 150 கோடிக்கும் அதிகமாகும். தொழில் நுணுக்க அறிவு பெற்றவர்கள் 27,500 பேர்களும் மற்றவர்கள் 1,90,000 பேர் களுமாக சிறுதொழில்களில்வேலை செய்து வருகிறார்கள் இது எட்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியாகும் சிறு தொழில் நடத்துபவர்களுக்கு நல்ல பல வாய்ப்பு களையும் வசதிகளையும் செய்து கொடுத் தால் இன்னும் அதிகப்படியானவர் களுக்கு வேலை கிடைக்கும். தமிழ் நாடு பொருளாதாரத்துறையில் தன்நிறைவை அடையும். சிறு தொழில்களின் வளர்ச் சியே பெரிய தொழில்களின் அடித்தள மாகும். சிறிய பல தொழில்கள் வளரும் போது பெரியதொழிற்சாலைகள் தானுவே தோன்றும்.

பாராட்டுகிறோம் !

தமிழ் நாட்டில் சிறு தொழில்களின் வேகமான வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் தொழில் மந்திரி திரு வெங்கட்ராமனுகும் அவர் தொழில் மந்திரியாக இருந்தபோது தொழில்களைத் தொடங்கி நடத்தும்படி சிறு மூலதனம் உள்ளவர்களையும் பெரியமூலதனம் உள்ளவர்களையும் ஊக்குவித்தார். மந்திரி திரு வெங்கட்டராமனுடைய முயற்சியால் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் ஏராளம். அவர் தொழில் வளர்ச்சிக்காக செய்த முயற்சியை பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம் அவரைப்போலவே இப்போது மந்திரியாகஇருக்கும் திரு மாதவனும் சிறு தொழில் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கரையும் கொண்டவர் சிறு தொழில் அதிபர்கள் அவரது ஆர்வத்தை பயன் படுத்திக்கொண்டு மேலும் பல தொழில்களைத் தொடங்க வேண்டியது அவசியமும் அவசரமும் ஆகும்.

மற்றும் மூடப்போகும் நிலையில் உள்ளதொழிற்சாலைகளையும் திறமையாக நடக்க தொழில் மந்திரி திரு மாதவன் ஆர்வம் எடுத்துக்கொள்ளவேண்டும் மேற் சொன்ன இடையூர்களைத் தவி, வருமான வரி விற்பனை வரி தொந்தரவுகளும் இருந்து வருகின்றன. அவைகளைப் பற்றி இங்கு விபரமாக எழுதுவது சரியல்ல. அந்தத் தொந்தரவுகளை நீக்கிவிட்டால் கடன் கொடுத்து உதவாவிட்டால் கூட சிறு தொழில்கள் வேகமாக வளர்ச்சியடையும். இப்போதைக்காட்டிலும் பத்து மடங்காவது தொழில் அபிவிருத்தி ஏற்படும் தொழில் துறையில் உள்ள சிகப்பு நாடாவை பச்சை நாடாவாக மாற்ற தமிழக அரசாங்கம் ஆர்வமும் அக்கரையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

....

ஒரு வணிகர் சொன்னர் ....

பக்கத்துக் கடையில் பத்துவரவு வைத்துக் கொண்டு பொருள்கள் வாங்கிப் போகும் நபர்கள் மீது எப்போது ஒரு கண் வைத்துக்கொண்டிருப்பார் அடுத்துள்ள கடைக்காரர் பொருள்களை அடிக்கடி அதிகமாகக் பக்கத்துக் கடையில் கொள்முதல் செய்து கொண்டுபோகும் பெரிய புள்ளிகளையும் அடுத்த கடைக்காரர் கவனத்தில் கொள்ளாமலிரார். இது தவறு அல்ல ; பொருமையினாலுமல்ல.

தமது வாணிபத்தைப் பெருக்கி லாபம் பெறும் வணிக சமுதாயம் அடுத்துள்ள கடைக்கு வந்து போகும் புள்ளிகளை கண்ணயராமல் கவனிக்கிறரென்றல் தமது கடைக்குள் வந்து சிறிது நேரமாவது உட்காரட்டுமே என்றுதான். சிறிது நேரம் உட்கார்ந்தால் நெருங்கிய நட்புறவோடு அன்யோன்யமாகப் பழகித் திரும்பவும் தானகவே தொடர்ந்து வரும் படியான பழக்கத்தை உண்டு பண்ணி விடுவார்கள் இந்தப் பழக்கத்தால் அந்த ஆண்டு விற்பனை உயரும் வியாபாரம் பெருகும்போது லாபமும் அதிகம் கிடைக்குமல்லவா !

பண்டக் கட்டுப்பாடோ லைசென்ஸ் பர்மிட் முறையோ, விற்பனை வரிச் சட்டமோ, இல்லாதிருந்தகாலத்தில் சாமான்கள் விலைவாசி குறைவாக இருந்தும் கடைகளில் பண்டங்கள் தேங்கியே இருந்தபோது வணிகர்கள் வழக்கத்தில் கொண்டிருந்த கண்காணிப்புப்பழக்கம் வேறு விதமாக மாரி விட்டது இன்றைய நிலையில் பக்கத்து கடைகளில் எந்த வரி அதிகாரி வந்திருக்கிறர் ? எந்த லேபர் ஆபிசர் வந்திருக்கிறர் ? இது விஷயத்தில் தான் கண்ணோட்டம் விட வேண்டியதாக இருக்கிறது என்றர் ஒரு வணிகர்

....

உழவு.

பேராசிரியர். வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எப். ஆர். எஸ். உ நிகம். (மைசூர்)

"கார் நடக்கும்படி நடக்கும் காரா ளர் தம்முடைய ஏர் நடக்கும் எனி ற்புகழ்சால் இயலிசை நாடக நட நடககும் சீர் திறல் நடக்கும் திரு வறத்தின் செயல் நடக்கும் பார் நடக்கும் படை நடக்கும் பசி நடக்க மாட்டாதே'

தொன்று தொட்டு இவ்வுலகில் நடைபெற்றுவரும் தொழில்கள் அனைத் துள்ளும் உழவுத்தொழிலே முதன்மையா னது, தலைசிறந்தது என்று வரலாற்று அறிஞர்கள் அறுதியிட்டுக்கூறுகிறார்கள் இக்கூற்று எத்துணை உண்மையுடையது, என்பதைஇலக்கியங்களும்எடுத்துக்காட்டு கின்றன. கற்றவர் மட்டுமின்றி கல்லாதவ ரும் இவ்வுண்மையை அறிந்து வைத்திரு க்கின்றனர். உயிர்கள் வாழ்வதற்கு மிக இன்றியமையாது வேண்டப்பெறும் பொருட்களுள் உணவு குறிப்பிடத்தக்கது காற்று, நீர், ஒளி போன்ற பிறவற்றை இயற்கை நமக்கு அளித்திருக்கிறது. உணவுப் பொருளும் நமக்கு இயற்கையில் கிடைப்பதாயினும் உணவு உண்டாக்கும் தொழிலில் நாம் முனைந்திருகிறோம், யார் எந்தத் தொழிலைச் செய்து எப்படி வாழ்ந் தாலும், வாழ்க்கைக்குஇன்றியமையாதது உணவு. அவ்வுணவை உண்டாக்கும் தொழில் உழவு என்பது சொல்லாமலே விளங்கும். உழவின்பழமை, பெருமை, இன்றியமையாமை அதனை மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் உழுதலை மேற் கொள்வார் இயல்பு, போன்ற கருத்துக்கள் சிலவற்றைக் காட்டுவது இக்கட்டுரை இவ்வளவிற்கும், தமிழ்மறையாய். பொது மறையாய் தரணி வாழும் மாந்தரெல் லாரும் மதித்துபோற்றும் மாண்புடைய தாய் நின்று காலவேறுபாடுகளால் நேரு கின்ற மாறுதல்களுக்கும் ஏற்ற சிந்தனைக் கருத்துக்களை வற்றாது வழங்கிடும் தெய் வத் திருக்குறள் ஒன்றே போதும்; அதி லும் உழவு என்னும் தலைப்பில் அமைந்த பத்துக்குறட்பாக்களே போதும்.

உழத்தல் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது உழவு என்னுஞ் சொல். இடையறுது உழைக்கின்ற மெய் ம்முயற்சியை உழத்தல் என்னுஞ் சொல் உணர்த்துகின்றது. காலவேறுபாட்டால் இயற்கையில் நிகழ்கின்ற எண்ணற்ற பல மாற்றங்களிடையே வெயில் மழை பனி இவை போன்ற பிறவற்றல் மனித உடம் பிறகு ஏற்படும் தொல்லைகளின் இடையே நெற்றியில் துளிர்க்கும் வேர்வை மெய்யெ ல்லாம் வழிந்து நிலத்தில் விழுமாறு இடைவிடாது முயலுகின்ற கடுமையான உடலுழைப்பு வேண்டப்படுதலான வே ளாண்மையாகிய பயிர்த் தொழில் உழவெ ன்று குறிக்கப்படுகின்றது.

ஆதிமனிதனின் வாழ்க்கை மிக எழியதாய் அமைந்திருந்தது ஆசைக

களும் அவனிடத்தில் குறைவாகவே இருந்தன அதனால் அவன் அதிக சிரமமின்றி தன்வாழ்க்கையை நடத்திவிட்டான் காலப்போக்கில் அவன் ஆசைகள் வளர்ந்து பெருகி விட்டன என்று காட்டும் வண்ணம் மக்கள் தொகையும் பல்கிப் பெருகி விட்டது விளைவாக, தேவைகள் பெருகி அவற்றை நிறைவேற்றும் வழிகள் அளவோடு இருந்தால் தன் உழைப்பை மிகவும் செலவிடவேண்டிய அவசியம் வந்தது இவ்வாறாக உணவுப்பொருள்களைத் தேடிச் செல்லும் நிலையை விட்டு தன் சுற்றுப் புரங்களில் அவற்றைப் பயிராக்கத் தொடங்கினான் மனிதன் வாழ்க்கையின் அத்யாவசிய தேவையான உணவுக்காக ஏற்பட்ட ஏர்த்தொழில் இன்று பெருமளவில் வளர்ந்து வாணிபத்திற்கு இன்றியமையாதவொன்றாய் விளங்குகின்றது உழவுத் தொழிலை உண்மையில் முதன்முதலாக உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் பெண்கள் அப்பெருமை பெண்களையே சேரும் என்று மானிடயியல் இளைஞர்கள் கருதுகிறார்கள் உண்மையாதாயினும் உழவுத் தொழிலில் பெண்டிற்குப் பெரும் பங்கு உண்டென்பது உலகறிந்த உண்மையாகும் பிற தொழில்களெல்லாம் நெடுங்காலத்திற்குப்பின்பே உலகில் தோன்றின எனவே உழவே மிகத்தொன்மையான தொழிலென்பது துலங்கும்

உழவுக்கு அடுத்து இன்றியமையாத தொழில் நெசவு ஆகும் அதற்கு எத்தனையோ பல தொழில்கள் எண்ணிக்கையின்றிபெருகிவிட்டன என்றாலும் உழவுத் தொழில் பழமையானது மேலும் பெருமைக்குரியதாயும் விளங்குகின்றது காரணம் உழவுத்தொழிலின் நேரிடையான, விளைவு கதிர் அதாவது தானியம் என்று வழங்கப்பெறும் உணவுப்பொருள் அவற்றோடு அறுசுவையும் நறுமணமும் நிறைந்த கனி வகைகள் மலரினங்கள் காய் கறிகள் முதலானவையும் உழவுத் தொழிலின் விளைவுகளே இவையனைத்தையும் விளைச்சல் என்ற ஒரு சொல்லே உள்ளடக்கி விடுகின்றது பிற தொழில்களின் விளைவு உணவு அன்று மாறாக உழைப்பை விற்று ஊதியமாகவாங்குவது பணம் இதுவே பிற தொழில்களைச் செய்வார் தம் நிலையாக இருக்கின்றது அதனால் தான் வள்ளுவத் திருமகனாரும்;

“சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை”

என்று முடிபாகக் கூறியருளினார் உலகத்தார்க்கு இன்றியமையாத உணவினை உண்டாக்கித் தரும் உழவர்கள் தேரினை தாங்குகின்ற அச்சாணி போன்றவர்கள் என்று கூறுகின்றார் அச்சாணியாவது அலங்காரத் தேரினைத் தாங்குவதோடு அது நிலை குலையாமல் மேற் செல்லவும் மிகத் தேவையான கருவியாக அமைகின்றது அதுபோன்றே உலகில் மனித இனம் வாழ்வதற்கும் அதனினும் சிறப்பாக வாழையடி வாழையெனத் தழைத்து நிலைப்பதற்கும் உணவு உண்டாக்கித் தரும் உழவுத்தொழில் இன்றியமையாததாகும்

உலகத்து உயிர்கள் எல்லாவற்றிற்கும் எண்ணற்ற பல பிரச்சனைகள் பொதுவாக இருக்கின்றன. அவற்றுள் தலையாயதாய் விளங்குவது உணவுப்பிரச்சினை. உண்டால் தான் உடலில் உரமிருக்கும் உடலில் உரமிருந்தால் தான் மேற்கொண்டு வாழவும், உழைத்துப் பொருளீட்டிப் பிற தேவைகளை நிறைவாக்கவும் முடியும், உணவில்லையேல் மெலிந்து தளர்ந்து சாக்காடெய்துவது ஒழித்து வேறெதனைச் செய்தல் இயலும்?

இவ்வுண்மையைக் கருதியே பல அறிவியற் கருத்துக்களை உயிரியலார் உருவாக்கியிருக்கின்றார்கள். 'பசி' என்பது ஒவ்வொரு உயிரும் பிறக்கின்றபோதே உடன் பிறப்பாக ஒட்டிக்கொண்டு வந்து விடுகின்றது சாகும்போது கூடவே சாகின்றது அஃதின்றேல் நம்மைச் சாகவும்செய்து விடுகின்றது அப்பசியைத் தணித்து அமைதிப்படுத்தா விட்டால் என்னென்ன விபரீதங்களை அது விளைவித்து விடுகின்றது! அதனால் வீழ்ச்சியுற்றப் பேரரசுகள் எத்தனை! ஆட்சிபீடத்தினின்று நூக்கியெறியப்பட்ட அதிகாரப் பெருந்தலைகள் எத்தனை! சமுதாய வாழ்க்கையிலே சாக்கடைப்புழுக்களைப்போல் புகுந்து கொண்டு விட்ட விரும்பத்தகாத வேதனைகள் எத்தனை! இத்தனைச் சோதனைகளும் சேர்ந்து புறப்பட்டால் உலகில் ஏற்படபோகும் விளைவுகளை யாரே இயப்ப வல்லார்? இவ்வளவு பெரும் ஆற்றல் வாய்ந்த பசியைத்தணிக்கும் உணவினைத் தருவது உழவென்னும் போது அதனை மேற்கொள்ளும் உழவப்பெருமக்களைத் தெய்வங்களாய் கருதலாம் போலிருக்கிறது. பசியால் விளையுறும் துன்பங்களை தொகுத்து அழகாகக் கூறும் பழந்தமிழ்ப் பாட்டொன்று மானம், குலம், கல்வி, வண்மை அறிவுடமை, தானம், தவம் முயற்சி, தாளான்மை, காதல், ஆகிய அரும் பெருஞ்செல்வங்கள் யாவும் பசி வந்திடப் பறந்து போம் என்கிறது அப்பாட்டு எனவே உணவு உயிர்களுக்கு இன்றியமையாத தென்பதும் அதனை உண்டாக்கித் தருவது உழவென்பதும் அது பழமையும்பெருமையும் நிறைந்தது என்பதும் அதனை மேற்கொள்வார் அச்சாணிபோல்வர்என்பதும் புலனுகும்பின்னுல் அமைவன பிற பண்புகளும் பண்பாடும் நாகரீகம் எனப்படும் நல்லன எல்லாமும் எந்தமொழி இலக்கியத்தைப் புரட்டினுலும் எந்தச் சமயத்தைத் தழுவி எங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையைப் படித்தாலும் உணவுக்கும் உழவுக்கும் அங்கு சிறப்பிடம் இருந்தே தீரும்.

"நகர்ந்தது மேழி ஆங்கே நகைத்
- தன கிளைகள் எல்லாம்
முகிழ்த்தது நாகரீகம் முல்வர் உழ
வரன்றே?
விளைந்தது மணிகள் தாமோ விளைந்
புன விந்தை எல்லாம்"

என்றெல்லாம் கவிப்பாடத் தூண்டுவது உழவுத்தொழில். அதனை மேற்கொள்ளும் வழிமுறைகளைத் தொன்டைத் தமிழர் நன்கறிந்திருந்தனர்

உழவுத் தொழிலின் பகுதிகளை முறைமை மாருமல் அடுக்கி வைத்து அனைவருக்கும் பொருள் புரியும் எளிய நடையில் அமைத்து அழகுத் தமிழில் சுருங்கக் கூறி விளங்க வைக்கிருர் திருவள்ளுவர் நிலவளம் நீர்வளம் என வாங்கு இரு வகை வளங்களையும் இணைத்து தன் அறிவாலும் உடம்பாலும் கருவிகளைப் படைத்து மனிதன் உழவுத்தொழிலைச் செய்கின்ருன் பயிர்த்தொழிலை மேற்கொள்ளும் உழவனிடத்தில் அமைந்திருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகளையும் அலசிக் கூறுகின்ருர் பொய்யா மொழிப் புலவராம் திருவள்ளுவர் திரண்ட வலிய உரமேறிய உடம்பும் அயராத ஆண்மைபூண்ட உறுதிவாய்ந்த உள்ளமும் இவ்விரண்டிலும் இழைந்து இணைந்துவிளங்கும் இடையருதஉழைப்பு ஊக்கம் தன்னம்பிக்கை பொறுமை ஆகிய பண்புகளும் உழவர்களுக்கு இன்றியமையாதவை மனைவியைப் போலக் கருதி போற்றிக் காக்க வேண்டும் என்பதை

வேறு யாறும் வேறு எந்த வகையிலும் கூறமுடியாத அளவுக்குத் திருவள்ளுவர் அழகாகக் கூறுகின்றார் இத்தகையபண்பு நலங்கள் அமைந்த உழவன் உழவினை எவ்வாறு முறையோடு செய்தல் வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிடுகின்றார் அகல உழுவதை விட ஆழ உழுவது மேல் என்பார்கள் அதினினும் ஓரடி மேலே ஏகி ஒரு பலம் புழுதி கால்பலமாக உணக்கி நிலத்தைப் பலமுறை நன்றாக உழவேண்டும் என்கிறார் தெய்வப் புலவர் அவ்வாறு உழுதால் எருவிட தேவையே ஏற்படாது என்பது அவர் கருத்து நாஞ்சிலாகிய கலப்பை கொண்டு நானிலத்து ஒன்றான மருத் நிலத்திலே உழுது இயற்கை செயற்கை எனப் பலவகை எருக்களையும் உரமாக நிலத்திலே இட்டு புல் பூண்டு கோரை போன்ற தேவையற்ற களையைக் களைந்து எறிந்துவிட்டு காற்றோடும் ஒளியோடும் சேர்ந்து பயிருக்கு உணவாகும்வண்ணம் தண்ணீர் விட்டு ஆடு மாடு போன்ற கால்நடைகளும் எலி குருவி கிளி பூச்சி போன்ற உயிரினங்களும் அழிந்து விடாமல் கவனமாகக் கண்காணித்துக் காப்பு செய்து உழைப்பின் பயனை நுகரும்போது ஏற்படும் நிறைவும் மகிழ்வும் சொற்களின் வரம்புக் கெட்டா விந்தையிலும் விந்தையாகும் "பருவத்தே பயிர் செய்' "ஆடிப்பட்டம் தேடி விதை' மேழிச் செல்வம் கோழைப்படாது காற்றுள்ள போதே தூற்றிக்கொள் முதலிய பழமொழிகளை உணர்ந்து உழுவார் பயிர்த் தொழிலை மேற்கொள்ள வேண்டும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவினைத் தருவதோடு உலகில் மற்றசெயல்கள் யாவும் தடையின்றி நடைபெறத் துணை புரிவதோடு மக்கள் அறிவு வளரவும் மொழியும் இலக்கியமும் வளர்ச்சியடையவும் உழவுத்தொழில் உறுதுணை புரிகின்றது உழவுக்கும் வாழ்க்கைக்கும் உள்ளது போலவே உழவுக்கும் மொழிக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு

பழந்தமிழர் இயற்கையோடு ஒன்றி இரண்டறக் கலந்து இழைந்து இயற்கை வாழ்வு வாழ்ந்தனர் பொருள்களை நுணுகி ஆய்ந்து அவற்றை பிறர் அறியுமாறு செய்து சென்ற நுண்மானை நுழைபுலமிக்கவர் தொன்மை தமிழ் காப்பார் வாழ்க்கையில் உழவுக்கிருந்த முதன்மையை - தலைமையை - சிறப்பினை எல்லாம் மனத்துக்கொண்டு ஒல்லும் வகையில் உழவுத் தொழிலைப் போற்றிக்காத்தனர் இவ்வாறாக அவர்தம் பேச்சு வழக்கில் பல சொற்கள் தமிழ்மொழியில் உயிர்பெற்றன அவற்றை தொகுத்துத் தருவது சட்ரையின் வரம்புக்கு எட்டாவன என்றாலும் ஒரு சில சொற்களைச் சான்றுக்காக காட்டுவோம் ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா? ஏர், ஏரி, ஏற்றம், எரு எருது, ஏர்களம், ஏர்க்கால், ஏர்கட்டுதல் ஏரோர், ஏர்மங்கலம் ஏராண்மை ஏரிவாரியம் போன்ற எத்தனையோ தமிழ்சொற்கள் உழவுத் தொழிலின் தொடர்பாகத் தமிழில் உருவானவை இன்றளவும் வழக்கில் இருந்து வருகின்றன ஏர் என்னும் சொல்லுக்கு நாஞ்சில் கலப்பை என்பன போக அழகு நன்மை எழுச்சி என்று பல அரிய அழகான பொருள்களும் கூறப்படுகின்றன, மொழிவளத்திற்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையானது உழவு உழவால் உருவான பழமொழிகளும்; நாடோடிப்பாடல்களும், விடுகதைகளும் எண்ணற்றவை. இவையெல்லாம் மொழிச்சிறப்பையுணர்த்துவதோடு மக்களிடையே நிலவும் பலவகை உறவு நிலைகளையும் உணர்த்துகின்றன,

....

மக்கள் வாழ்க்கையும் உழவோடு கலந்தால் பல செயல்கள் தனிமனிதன் தன்பழக்கங்களாய்,குழுக்களின்வழக்கங்களாய்வளர்ந்திருக்கின்றன. பொருள்வாழ்க்கைக்கு அடிப்படையானது உழவு. செல்வம் என்றும், பணம், என்றும்கூறப்படும் பொருள்களைக்காட்டிலும் அரம் என்றும் புறம் என்றும் வகுத்துக் கூறப்படும் மக்களின்வாழ்க்கை நிலையாகிய பொருள்களுக்கு உழவு அடிப்படையாய் மிகவும் அமைந்திருக்கின்றது. நிலத்தின் தன்மைக்கேற்பக் குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல், பாலை என்று தனித்தனி வாழ்க்கைமுறைகளை அமைத்தனர், பழந்தமிழர் இதுநிலத்தின் வளத்தைப் பொறுத்தும்,அங்குகிடைக்கின்றபொருள் (உணுப்பொருள்கள்) குறித்தும் அமைந்த பாகுபாடு இவ்வாருக வாழ்க்கையோடு ஒன்றியிருக்கும் நிலத்திற்கும், அந்நிலத்தைத் தழுவிய உழவுத் தொழிலுக்கும் உள்ள உறவு அறிந்து இன்புறத்தக்கது. தமிழகத்தில்பாலை தவிர்த்துஏனைய நிலப்பகுதிகள் உளவாதலின் நானிலம்என்று தமிழ் கூறும் நல்லுலகைத் தமிழர் பெருமிதத்துடன் வழங்கினர். 'நானிலம்' எனுஞ்சொல் பரந்த நிலப்பரப்பு முழுவதையும் குறிக்கவும் பயன்படும்.

நானிலத்திலும் மருத நிலம் மிகச் சிறப்புடையது. காரணம், சிறப்புக்குரிய ஏர்தொழிலின் நிலைக்களனய் விளங்குவது மருதம் வயலும் வயல்சார்ந்தநிலப்பரப்பாகும், மருதம் என்ற சொல்லை அடியொற்றி மருதன், மருத முத்து, மருதி, மருதாம்பாள் என்று மக்கட்கும் பெயர்கள் வழங்கியிருக்கின்றனர் பழந் தமிழ் மக்கள் தமிழகத்தில் உழவப்புலவர் பலரும் இருந்திருக்கின்றனர் என்பதற்கு மருதன், இளநாகன் மாங்குடி மருதன் போன்ருேர் சான்ருவர் மருத நிலத்து நிகழும் அகவொழுக்கம் ஊடல்என்பது இதனை வள்ளுவப்பெருந்தகை நயமும், சுவையும் தோன்ற மிக அழகாகச் சிறப்பித்திருக்கின்ருர் என்பது இங்கு கருதத் தகுந்தது. (அதிகாரம் 131, 132, 133) இனி உழவுத்தொழிலைக்கருவாகவும் கருவியாகவும் கொண்டு விழாக்களும் இயற்றப் பெருகின்றன இவை முதலுழவின்போதும் அறுவடையின் போதும் பிற சிறப்பான வேலைகளிலும் உலகு எங்கிலும் நடைபெறுகின்றன அவற்றில் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பெரும் அளவில் கொண்டாடப் பெறுவது தைத் திங்களில் வரும் பொங்கல் திருநாள் மாசுகளைந்து தூய்மையடைதல் போக்கி எனவும், உழவுக்கு உறு துணையாம் இந்திரன் வருணன் கதிரவன் என்பாரக்கெல்லாம் நன்றியுணர்த்தும் வகையில் பொங்கல் எனவும் கால்நடைகளின் உதவிக்கு நன்றியுணர்த்தும் வகையில் மாட்டுப் பொங்கல் எனவும் நண்பரையும் உறவினரையும் கண்டு நலம் வினவும் வகையில் மகிழ்ச்சிப் பரிமாற்றம் பெய்யக் காணும் பொங்கல் எனவும் பொங்கல் திருநாள் உழவர் பெருநாளாகக் கொண்டாடப்படுகின்றது

இறுதியாக உழவரைப்பற்றிச் சில வார்த்தைகள் பழந் தமிழசத்தில் உழவர் உழுவித்துண்போர் என வாழ்ந்திருந்தனர் என்பது இலக்கியங்களிலிருந்து அறியக்கிடக்கின்நது உழவர்கள் பிறர்க்கு வழங்கி வாழ்பவர்கள் இரப்பார்க்கு ஈயும் அவர்கள் பிறரிடம் சென்று இரப்பதில்லை உழவரே உண்மையான உரிமை உணர்ச்சியோடு வாழந்திருந்தவர் மற்றவர் எல்லாரும் உழவரைத் தொழுதுண்டு அவர்பின் செல்லவேண்டியவரே உழவர்கள் தங்கள் தொழிலைச் செய்யாமல் இருந்துவிட்டால் உலகின் நிலை என்னும் ஆசைகளைத் துறந்துவிட்ட துறவிகளே

அல்லற் படுவர் என்னும்போது எளிய மக்களின் நிலை அதனை யாரே இயம்பவல்லார் அதனாலன்றோ கவிக் குரிசில் பாரதியும் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று உழவுக்கு முதன்மை தந்தார்? எனவே வாழ்வுக்கு இன்றியமையாத உணவை உண்டாக்கித் தரும் உழவையும் உழவரையும் விழியினும் உயிரினும் மேலாகக் கருதிப் போற்றிக் காக்க வேண்டியது தனி மனிதனுக்கும் அரசுகளுக்கும் தலையாய கடமையாகும்.

உண்மைதான்!

அந்தஊர் பெரிய நகரமும் அல்ல! சிறிய கிராமமும் அல்ல! சுற்றுப்புறங்களில் சிறு சிறு கிராமங்களுக்கு மையமாக அமைந்திருந்த அந்த ஊரை சிறு நகரமாகவும் சொல்லலாம் அந்த சிறு நகரத்தில் பல வணிகர்கள் வாணிபம் செய்கிறார்கள் நிலச்சொத்துடைய வசதியுள்ளவர்களே அதோடு மூதாதையர் செய்துவந்த தொழிலைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்

மகசூல் காலங்களில் அந்த ஊர் கடைத்தெரு மிகவும் சுறு சுறுப்பாக இருக்கும் பல கிராமங்களுக்கு மத்தியிலிருப்பதால் இந்த காலங்களில் ஆங்காங்கு விளைந்த தானியங்களை கடைகளுக்கு கிராம ஜனங்கள் கொண்டு வருவார்கள் கடைத் தெருவில் மாலை நேரங்களில் ஜன சந்தடி அதிகமாக இருக்கும் கொண்டு வந்த தானியங்களை கடைத்தெருவில் விற்றுவிட்டு பணம்வாங்கிக்கொண்டுபோவார்கள் வாரத்திற்கொருமுறை அந்த சிறிய கிராமத்தில் பெரிய சந்தை கூடும் மற்ற பண்டங்கள் வரத்தை விட சந்தைக்கு நவ தானிய வரத்து அதிகமாக இருக்கும்

பெரிய டவுன்களில் உள்ள பெரும் மண்டி வர்த்தகர்கள் இந்த ஊர் வியாபாரிகளிடம் ரொம்பப் பணம் அட்வான்ஸாகக் கொடுத்து கமிஷன் ஏஜண்டாக இருந்து நவதானியங்களை வாங்கி அனுப்ப நியமனம் செய்வார்கள்

கமிஷன் அடிப்படையில் சரக்குகள் வாங்கிக் கொடுப்பது நல்ல லாபம் தருவதாகும் ஏதோ பிறர் பணம் கொடுக்கிறார்கள் கைமுதல் இல்லாத வணிகம் இது! கைப்பொருளுக்கு நஷ்டம் இல்லை இருந்தாலும் பிறருக்காக கொள்முதல் செய்யும்போது விலையை ஒடித்து வாங்குவதற்கு நல்ல அனுபவம் வேண்டும் மார்க்கெட்டுகளில் விலை நிலவரம் தெரிந்திருக்க வேண்டும் அப்பொழுதுதான் பணம் கொடுத்தவர்களுக்கு திருப்திகரமாய் அவர்களும் லாபமடையும்படியாக சரக்குகள் வாங்கிக்கொடுத்தால்தான் அவர்களின் நம்பிக்கையைப்பெறமுடியும்

அந்த சிறிய நகரத்தில் ஒரு நாள் சந்தை கூடும் நாளன்று ஒரு வணிகரின் கடைக்கு பிச்சைக்காரர்கள் வந்துபோய்க் கொண்டே இருந்தார்கள் வந்த பிச்சைக் காரர்களுக்கு வணிகர் துட்டு போட்டுக் கொண்டே இருந்தார்.

தன்னையே பக்கத்திருந்து பார்த்துக்கொண்டிருந்த தன் நண்பரிடம் சொன்னார்; நேற்றைய வியாபார பணத்தில் குத்து மதிப்பான சரிபாதி சில்லரைப் பணம் இது! எண்ணிப் பார்ப்பதில்லை பிச்சை போடும்போது எவ்வளவு என்று பார்த்துப் போடுவதுமில்லை! ஏனெனில் காசைப்பார்த்தால் பிச்சையிட மனம் வராது! எனக்கு இன்று என்ன லாபம் வருமென்று தெரியாது நான் அறிந்து கொள்ள முடியாமல் ஆண்டவன் எனது வியாபாரத்தைப் பெருக்குகிறார் அதனால் தான் வாரமொரு முறை நான் பிச்சையிடுகிறபோது யாருக்கு எவ்வளவு துட்டு போடுகிறோம் என்று அறிந்துகொள்ளாமலே தருமம் செய்துவருவதாக கூறினார் அவர்

With the best campliments of :

T.V.SUNDRAM IYENGAR & SONS PRIVATE LIMITED

MADURAI

Branches at: TIRUNELVELI, PUDUKKOTTAI
TIRUCHIRAPALLI, SALEM,
COIMBATORE TRIVANDRUM
& ERNAKULAM

....

எல்லாம் நன்மைக்கே!

ஜனாப். கே. முகம்மது இபுராகிம், தலைவர் வரி செலுத்துவோர் சங்கம் குடந்தை

அளவற்ற அருலாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய ஆண்டவனின் திரு நாமத்தை கொண்டு இந்த கட்டுரையை ஆரம்பிக்கிரேன்.

இந்த வியாபாரக்குரல் பத்திரிகை ஆசிரியர் பி. ராமசந்திர அய்யர் 1954ம் வருஷம் ஆரம்பித்து இவ்வணிகர்களுக்கு அரசாங்கத்தால் அறிவிக்கும் சட்டங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் அவ்வப்போது பிரசுரம் மூலம் பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே——

இணைவாழ்த்துநாரா மலரணையா கற்றதுரை விருந்துரையாதார் என்ற வள்ளுவர் பெருமானாரின் குரளுக்கிணங்க இப்பத்திரிகை குழந்தை பருவம் தாண்டி வருவதற்கும் வாலிப பருவம் அடைந்து பலன் அடைந்தவர்க்கு காரணமாக உள்ள வணிகர்களையும் ஆதரவாளர்களையும் அன்பர்களையும் உண்மையும் நேர்மையும் கடைபிடித்து வேல் ஆயுதமாக உபயோகப்படுத்தும் செயல்புரியும் வணிகர்களை மனதார வாழ்த்துகிறேன் வாழ்கவணிக பத்திரிகை வாழ்க, ஆசிரியர் வாழ்க, வியாபாரகுரல் ஓங்குக வளர்க.

1954 முதல் இந்த வியாபாரக்குரல் வணிகர்களுக்காக அரும்பாடுபட்டு வருகிறது வணிகர்களுக்கு ஏற்படும் வரி, லைசென்சு, கட்டுபாடு இவைகளை காலத்தோடுபிரசுரித்து வருகிறது வணிகர்கள் பத்திரிக்கை பார்ப்பது பெரும்பாலோர் இல்லை வணிகர்களுக்காக பாடுபடுவது நமக்கு தெரிந்ததே. பணம் இல்லை மனம் உள்ளவர்களுக்கு பணம் இல்லை இந்நிலையில் இப்பத்திரிகை நல்ல முறையில் மேலும் நடப்பதற்கு வணிகர்கள் போதிய ஆதரவளிக்கவேண்டுகிறேன்.

உணவு தானிய மளிகை வியாபாரிகளுக்கு ஒரு பெரிய சோதனைகாலம் உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்துக்கு இருபக்கம் இடி; அதேபோல் விலை வாசி இறக்கத்தில் நஷ்டம் ஒரு பக்கம்; நிலுவை சேதாரத்தால் நஷ்டம் வியாபார மந்தத்தினால் நஷ்டம் விற்பனை வரி பல ரூபக்தில் நஷ்டம்; இந்த நிலையில் லைசென்ஸ் மளிகை வியாபாரிகளுக்கு விதிப்பது நகராட்சிவிதிகள் எலி தின்னும் வேளாண்மைப் பொருள்; எண்ணை வித்துகளுக்கு கலப்படத் தடைச்சட்டம்; மொத்த வியாபாரம்; சில்லரை வியாபாரம் என்ற பாகுபாடு: திராசுத் தட்டு முத்திரை; கண்ட்ரோல் கட்டணம்; தாலூகா சப்ளை ஆபீஸ் லைசென்சு; விற்பனை வரி லைசென்சு; இதன்றி மார்க்கெட்டிங் போர்டு. புதிதாக துவரை உளுந்து, பாசிப்பயறு மணிலா பயறு புகையிலை எள்ளு, முந்திரிப்பருப்பு நெல்லு தேங்காய் இந்தப்பொருள்களை கடைகளில் வியாபாரம் செய்பவர்கள் ஒவ்வொரு பொருளுக்கும் ரூ 10. வெத்திலைபாக்குகடைக்கு 15 முதல் 25 வரை விற்பனைக்கு தக்க லைசென்சு வாங்கி இரும்புகளுக்கு ரிட்டன் அனுப்ப வேண்டும், சில்லரை வியாபாரம் செய்பவர்களும் கணக்கப்பிள்ளை கிடையாது வாழ்க்கை நடத்துவதற்க்சாக மூலதனம்ரூ. 100 வைத்து சாமான் வைத்து வியாபாரம் செய்யவும் ஏழை பெண்மணிகளும் வயோதிகர்களும் மேல்கண்ட சட்டத்தினால் பாதித்துலைசென்சு கட்டக்கூட முடியாமல் பலதுறையில் கஷ்ட நஷ்டம் அடைந்து கடையை எடுத்து விடுகிறார்கள். இந்த மாதிரியான லைசென்சு கட்டணம் இரும்புவியாரிக்கு உண்டா? தங்க வியாபரிக்கு உண்டா? ஜவுளி வியாபாரிக்கு உண்டா? பாத்திர வியாபாரிக்கு உண்டா? வைரக்கடைகு உண்டா? அரசு சிந்தித்து ஒரே இடத்தில் மேல்கண்ட கட்டண லைசென்சு பற்றிய மொத்ததொகையை கலெக்டர் ஆபிசில் ஒரே இடத்தில் மளிகை வியாபாரிகளிடம் பெற்று லைசென்சு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன் வணிகர்கள் சங்கங்கள், எம். எல். ஏ. எம். பி., இவர்கள் கருணையுடன் இச்த கட்டுரையை படித்து பரிசீலித்து வணிகர்களை வாழவும், தமிழக அரசுக்கு வணிகர்கள் நேர்மையுடன் ஒத்துழைக்கவும் சிந்தித்து யாவரும் நல்ல முறையில் செயல்பட எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்: வாழ்க தமிழக அரசு வளர்க வணிகர்களின் ஒற்றுமை. வணிக பத்திரிகைகுரல் ஓங்குக:

"வர்த்தகர்களே வழிகாட்டுவீர்"

திரு. பி. ஷண்முகம், காரியதரிசி தமிழ்நாடு வர்த்தகக் கழகம்.

....

தராசு என்பது நீதியின் சின்னம் தராசைக் கையாளுகின்ற நீங்கள் நீதி நெறிதவருதீர்கள். நல்ல பொருளையே வியாபாரம் செய்யுங்கள். குறைந்த விலை கொடுத்து மட்ட பொருளை வாங்கி குறைந்த விலைக்கு வியாபாரம் செய்யாதீர்கள். நல்ல பொருளை வாங்கி சுத்தம் செய்து தகுந்த விலைக்கு விற்பனை செய்யுங்கள், கிடைக்கின்ற இடத்தில் பொருளை வாங்கி, கிடைக்காத இடத்திலுள்ள மக்களுக்கு தேவையான சமயத்தில் தேவையான அளவு பொருள் கிடைக்க உதவி செய்யுங்கள். நீங்கள் வாங்குகின்ற பொருள் நல்ல பொருள் தானு கலப்படம் இருக்கிறதா? என்று கவனித்து வாங்கிவியாபாரம் செய்யுங்கள். லாபம் கருதி கலப்படம் செய்யாதீர்கள்.

வியாபாரம் பொதுத் தொண்டு என்பதை மறந்து விடாதீர்கள். மக்கள் நலன் காக்க, நாட்டு நலன் காக்கவியாபாரத்தை நேர்வழியில்பயன் படுத்துங்கள். எப்பொருளும் பட்டியல், போட்டு வாங்குங்கள். நீங்கள் விற்கின்ற பொழுதும் பட்டியல் இல்லாமல், வரி இல்லாமல் வியாபாரம் செய்யாதீர்கள். நீங்கள் ஒவ்வொரு வியாபாரியிடமும் பட்டியல் இல்லா. வரியில்லா வியாபாரம் செய்யாதீர்கள் என்பதை வலியுறுத்துங்கள்.

பொருள்களுக்குத் தட்டும்பாடுகளை ஏற்படுத்தாதீர்கள், மக்களுக்குத் தேவையான பொருளை வைத்துகொண்டு "இல்லை" என்று சொல்லி நல்ல விலை வருமென்று காத்திருறுகாதீர்கள். லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வியாபாரம் செய்யாதீர்கள் சிலருக்கு விற்று அதிக லாபம் பெறுவதைவிட பலருக்கு விற்று குறைந்தலாபம் பெறுவது சிறப்பு என்று கருதுங்கள் வியாபாரத்தில் அதிக லாபம் பெற்றுவிட வேண்டும்; இப்பொழுதே அதிக லாபம் அடைந்துவிட வேண்டும் என்றெல்லாம் எண்ணுதீர்கள்; வியாபாரத்தில் நம் உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கிடைத்தால் போதும் என்ற பெருநோக்கில் வணிகம் செய்புங்கள். "சூதாட்டபேரம்" (சட்டா வியாபாரம்) நடத்தாதீர்கள்.

நன்ருக நிறுத்து வியாபாரம் செய்யுங்கள். மனசாட்சிக்கு மட்டும் அஞ்சுங்கள். நீங்கள் வேறு எதற்க்கும் அஞ்சாதீர்கள். நாட்டுப் பணிகளில் துடிதுடிப்புடன் செயலாற்றுங்கள். நாட்டு நலனுக்காக எந்தத் தொண்டையும் செய்ய தவறி விடாதீர்கள். மக்கள் தொண்டில்அதிக கவனம் செலுத்துங்கள்- மக்கள் துன்பத்தால் அவதிபடுகிருர்களென்ருல் அதைக் களையமுதலில் நடவடிக்கை எடுக்கின்றவர்களாக நீங்கள் நில்லுங்கள். நாட்டுக்கொரு தொல்லையா? விட்டுவிடதீர்கள். தொல்லைகள் அகற்றதுடி துடித்து முன்வாருங்கள், குறித்த காலத்தில் குறித்தபடி பணிகளைச் செய்யுங்கள். சொன்னசொல் தவருதீர்கள். காலம் தவருதீர்கள். கடமை தவருதீர்கள்- நாணயம் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக சமுதாயத்திற்கு, நாட்டிற்கு வழிகாட்டுங்கள். வாணிபம் என்பதை மக்கள் பணியாகக் கருதி, நாட்டு நலனை மனதில் கொண்டு, வாணிபம் செய்து சிறப்படையுங்கள்.

தொழிலதிபர்களும் - பிரபலஸ்தர்களும்.

ஸ்ரீ டி. எஸ். ராஜம், மதுரை. டி. வி சுந்தரம் அய்யங்கார் புதல்வர். தோற்றம் 1902. மதுரை டி. வி. எஸ். & சன்ஸ்,, பிரைவேட் லிமிடெட், ஸ்தாபனத்தின் அதிபர். மோட்டார், பஸ், லாரி, போக்குவரத்து, ஆட்டோமொபைல் சம்மந்தப்பட்ட டலவற்றிலும் தனித்தனி பிரிவுகளை ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நல்வாழ்வுக்குக் காரணமாக விளங்குகிருர். நிர்வாகத் துறையில் மேம்பட்ட அறிவுத்திறனுடைய இவரது டி. வி. எஸ். ஸ்தாபனம் பஸ் போக்குவரத்துத் தொழிலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகச் செயல்பட்டு வருகிறது. பல்வேறு தொழில் ஸ்தாபனங்களில் தொடர்பும் தலைமைப் டொறுப்பும், கொண்டுள்ளவர் தொழிலாளர்கள் வீட்டு வசதிக்கென டி. வி. எஸ். நகர் ஒன்றை அமைத்து பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இருப்புக்கு இடமளித்துள்ளவர். தொழிலாளர் குடும்ப நலனுக்கென மருத்துவ மனை பள்ளிக்கூடம் பேன்ற பல நற்பணிகளைச் செயல்படுத்தி வருபவர். கல்வித் துறையில் ஏழை மாணவர்களின் உயர் படிப்பிற்கென டிரஸ்ட் ஒன்றை ஏற்படுத்தி ஆண்டுதோறும் உதவியளித்து வருகிருர் இரக்க மனதோடு இவர் தமது தொழிலால் தர்மத்தை வளர்த்துவரும் பெருங் குணமுள்ள தொழிலதிபர். ஆஸ்திகப்பணியில் நம்பிக்கையும், தெய்வபக்தியில் சிறந்தும் புண்ணியபலமிக்க செல்வந்தராய் பலரும் வாழ்த்த வாழ்க்கை நடத்தி வருகிருர்.

திரு கருமுத்து தியாகராஜன் செட்டியார் மதுரை தோற்றம் 1893 பல நூற்புமில்களின் டைரக்டர் பல தொழில் நிறுவன

ங்களில் தொடர்பு உள்ளவர் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு நல்வாழ்வுக்கு காரணமானவர்-

திரு ஜி. டி. நாயுடு, கோயம்புத்தூர் தோற்றம் 1893. நடுத்தர குடும்பத்தில் பிறந்தஇவர் சிறுவயதிலிருந்தே தொழில் துறையில் ஆர்வம் காட்டி சுய முயற்சியால் வாழ்க்கைப் போராட்டங்களை சமாளித்து உயர்வு பெற்றவர் பல்வேறு தொழில்களிலும் பல துறை ஆராய்ச்சிகளிலும் இவரது மேம்பட்ட அறிவுகண்டு இவரை அதிசய மனிதரென மக்கள் பாராட்டிப் பேசுகின்றனர் பஸ்போக்கு வரத்து தொழிலில் இவரது ஆற்றல்மிக்க நிர்வாகத்தைக் கண்டு மோட்டார் மன்னரெனப் பாராட்டுகின்றனர் பல்வேறுதொழில்கள் விஞ்ஞான ஆயுர்வேத சித்த வைத்தியத் துறை போன்ற பலவற்றிலும் இன்றைய தள்ளாத வயதிலும் ஆர்வம் காட்டி வருகிறுர் திரு ஜி. டி நாயுடு

வைஸ்யபூஷணம். வள்ளல். ஸ்ரீ பி. ஏ. ராஜூ செட்டியார் கோயம்புத்தூர் பி. அளகிரிசாமி செட்டியார் புதல்வர். தோற்றம் 29-1-1895, தங்கநகை வியாபாரத்திலும் ஜவுளி வர்த்தகத்திலும் நன்கறிந்த பிரபலஸ்தர். இன்சொல்லும் நிறைமனதும் பெற்ற சகோதரர், மக்கள் கூட்டுறவோடு கோவையில் பி. ஏ. ராஜூ செட்டியார் & பிரதர், என்ற பெயரோடு தொழில் நடத்தி வருகிறுர். கோவை ராஜா தியேட்டர் உரிமையாளராகவும் பட விநியோகஸ்தராகவும், சூரியபிரபா மில்ஸ் மானேஜிங் டைரக்டராகவும் தொழில் நடத்தி வருகிறுர் பொது நலன் புரிவதற்கெனவே புவியிற்பிறந்து பொறுப்புள்ள பதவிகள் பல வகித்து, புகழடைந்து, அறிந்தோறும், தெரிந்தோறும், அன்புடன் நாட அவரவர்கள் விரும்புவதற்கொப்ப, வரையாது வாரிப்பொருள் வழங்கி வள்ளலென வாழ்த்துக்கள் பல பெற்று, வயதிலும், வர்த்தகத்திலும் சிறந்தவராக வாழ்க்கை நடத்திவருகிறுர்

ஸ்ரீ எஸ். கே. சுப்பையர் பிள்ளை வேதாரண்யம். பல உப்பளம் உரிமையாளர் புகையிலை வியாபாரம். நகர முக்கியஸ்தரான இவர் பரோபகார குணமுள்ளவர் பல நற் பணிகளுக்கு உதவிவருகிறர்

திரு என். ஆர். எம். குழந்தைவேல் கோனர், கரூர். நெல் அரிசி நவதானிய ை யாபாரம் கமிஷன் மண்டி தெய்வபக்தி உள்ளவர் யாருக்கும் உதவியளிக்கும் விசால நோக்குடைய வணிக பிரமுகர்

ஆதி. வி. ராமச்சந்திரன் செட்டியார் கரூர் அதிவி. சூரியநாராயண செட்டியா ின் சகோதரர் மளிசை, மண்டி பல கம்பெனிகளின் பிரதிநிதி பர்மாஷெல் ஏஜண்டு. கரூர் லெட்சுமி விலாஸ் பாங்கு உபதலைவர் நாரதகான சபா காரியதரிசி வர்த்தகசபைத்தலைவர் செல்வாக்கும் பரோபகார குணமும் உள்ளவர்



திரு. எஸ். பெத்தண்ணன் தஞ்சை தோற்றம் **1912** **1936** -ல் சீயக்காய் பவுடர் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கினர் சேமியா மட்டிப்பால் பத்தி ஆகிய பொருகளும் தயாரித்து வருகிறர் பொதுத்துறையில் செல்வாக்குடையவர் நகர தி. மு. க. அவைத்தலைவர் கரந்தை தமிழ்சங்க நிர்வாகக்கமிட்டி மெம்பர் தஞ்சை நகர சபை தலைவராவும் பதவி வகித்து வருகிறர்.

திரு கே. தர்மராஜ பிள்ளை புதுக்கோட்டை. கரந்தை கலியபெருமாள் பிள்ளை புதல்வர் தோற்றம் 1910. கண்ண பிரான் சோப் ஒர்க்ஸ் உரிமையாளர் புதுக்கோட்டை நகர சபையில் பல ஆண்டுகள் தலைவராகப் பதவி வகித்தவர் பல பொது பணிகளுக்கு பெரு நிதி வழங்கியுள்ளவர்.

திரு ஏ. டி. ஜெயவீரபாண்டிய நாடார் நாகப்பட்டினம். தூத்துக்குடி துரைசாமி நாடார் புதல்வர். தோற்றம் 1924 ஏற்றுமதி இறக்குமதியாளர் 1946-ம் ஆண்டில் தமது சகோதரர்கள் கூட்டுறவோடு நாகையில் வர்த்தகம் துவக்கினார் மலேயா நாடுகளில் வர்த்தகம் நடத்தி பல நண்பர்களைக்கொண்டிருப்பவர் கல்வித்துறைக்கு பெருநிதி வழங்கியுள்ளவர் பலர் நல்வாழ்வுக்கு இவர் காரணமாவர்

ரூப்பா. ஆர். எம். என். ஸ்ரீனிவாஸன் திருபுவனம். (திருவிடைமருதூர் வழி) தோற்றம் 31 -3- 1932. பட்டு ஜவுளி வியாபாரம் 1 -1- 1936 -ல் தமது ஸ்தாபனத்தை தன் பெயரால் துவக்கி விரிவாக தொழில் நடத்திவருகிறார் பட்டு ஜவுளி வர்த்தகத்தில் பிரபல வியாபாரிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு மொத்த வியாபாரமும் செய்து வருகிறார்

திரு பி. கே. டி. ஷண்முகம், ஜவல்லரி தாரூ வியாபாரம், கும்பகோணம். பொது துறை பணிகளில் உழைப்புக்கு "ஒரு நல்ல மனிதர்" உடல் வலுவற்றிருந்தாலும் உள்ள வலுவோடு உழைத்து வரும்

ஸ்ரீ பி. ஆர்- சீதாராம அய்யர் ஜவுளி வியாபாரம், திருச்சிராப்பள்ளி. பிரபல பிரமுகர் (லேட்) பி. ஆர். நாராயணசாமி அய்யர் சகோதரர். திருச்சி ஜில்லா வர்த்தக சபையின் தொடர்ந்த தலைவர், பல வணிக ஸ்தாபனங்களில் பதவியும் துடர்பும், கொண்டிருப்பவர். தமதுதொழிலால் பல நற்பணிகளுக்கு உதவியளித்து வருகிருர். பொதுத் துறையில் நன்மதிப்பு பெற்றிருப்பவர்

பேராசிரியர் வ. பெருமாள் எம். ஏ பி. டி. எம். ஆர். ஏ. எஸ்- முதல்நிலை கல்லூரி உரிகம், கோலார் தங்கவயல். தோற்றம் 1934. இவர் இலங்கை ஆசிய ஆராய்ச்சிக் கழகம், கோலார் மாவட்ட தமிழ் சங்கம், மற்றும் பல பொது நலத் துடர்பு கொண்டிருப்பவர் இலக்கியம். கலை, பண்பாடு, கல்வி, இவைகள் குறித்து நல்ல கருத்துக்களை தெளிவாக விளக்கிக்கூறும் வல்லுணர்

புகழ்பெற்றபுண்யபூமியாகிய தில்லையில் வள்ளல் ஸ்ரீ செ. ரெத்தினசாமி செட்டியார் 1902 -ல் தோன்றியவர் சிதம்பரம் ஸ்ரீ நடராஜ விலாஸ் ஜவல்லரி ஹால் இவருடைய ஸ்தாபனமாகும் பவுன் நகைகள் வெள்ளிப் பாத்திரம், மற்றும் எவர் சில்வர் வியாபாரம் நடத்தி வருகிருர் தன்னையும் தன் செயலையும் உணர்ந்து புண்ணிய பலத்தால், நாடி வருவோருக்கு வேண்டுவன வரையாது அளிக்கும் இவரது உள்ளங்கண்டோர் "வள்ளல்" என வாழ்த்துக்கள் கூறி பட்டம் ஈந்தனர். எண்ணற்ற நற்பணிகள் இயங்க வள்ளல் செ. ரெத்தினசாமி செட்டியார் காரணமாக உள்ளவர்

....

ஸ்ரீ அ. மு. பொ. திருவம்பலம் செட்டியார் நாகப்பட்டினம் பழம் பெரும் முக்கிய பிரமுகர் பல பதவிகள் வகித்தவர் நாகை நகரசபை முன்னுள் தலைவர் தர்மம் காத்து வரும் ஆஸ்திகர் பல நற்பணிகள் செயல் பட காரணமாயுள்ளவர்

—.........—

ஸ்ரீ சி. ராமநாதன் செட்டியார், கரூர். (சேந்தமங்கலம் நாமக்கல் தாலூகா (சக்ரபாணி செட்டியார் புதல்வர் சென்னை ஹைகோர்ட் முன்னுள் நீதிபதி சுந்தரம் செட்டியார் இவரது பெரிய தகப்பனராவர். ஸ்ரீ ராமநாதன் செட்டியார் 1932-ல் கரூர் வைஸ்யா பாங்கின் உதவிக் காரியதரிசியாக உத்தியோகம் பெற்ருர் இவரது சேவையும், பெருங்குணமும், பலரைக் கவர்ந்தது. பலரும் விரும்பி நாடும் பிரதம காரியதரிசியாக 1962-ல் பதவி உயர்வுபெற்ருர் இன்றைய நிலையில் பாங்கின் மூலதனம் 3 லட்சத்திற்கு மேல் கூடி இருப்பதும் இருபதுக்கு மேலான கிளைகள் இவரது காலத்தில் கூடுதலாகி 45 கிளைகளுடன் தலைமையகத்தில்விஸ்தாரமான கட்டிடத்தில் இயங்கி வருவதும் இவரது திறமையான சேவைக்கு எடுத்துக் காட்டாகும். செல்வமும் செல்வாக்கும் நிறைந்து நிற்கும் ஸ்ரீ ராமநாதன் செட்டியார் பல்லோர் வளர்ச்சிக்குக் காரணமானவர்.

திரு. ஜி. கருப்பையா மூப்பனர் சுந்தரப்பெருமாள்கோவில். கபிஸ்தலம் எஸ்டேட் கோவிந்தசாமி மூப்பனர் புதல்வர் பல பரம்பரையாக தஞ்சை ஜில்லாவில் பிரபலமான நிலப்பிரமுகர் குடும்பம் திரு கருப்பையா மூப்பனர் தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும் பல நற்பணிகள் செயல்பட காரணமாகவும் பலரும் பாராட்ட வாழ்க்கை நடத்தி வருகிருர்

திரு. கே. எஸ். வீரண்ண செட்டியார் "வீகோ" கோயம்புத்தூர். தோற்றம் 1909. நடுத்தர குடும்பத்தில் தோன்றிய இவர் கைத்தறி நெசவு புடவை வியாபாரத்தில் அறிவுத் திறன்கொண்டு ஆற்றி வரும் பணியால் கைத்தறி நெசவு சேலைகள் தயாரிப்பில் "புது மோஸ்தர் உண்டு பண்ணுபவர்" (FASHION CREATOR) என பிரபலமடைந்துள்ளவர் இவரது ஸ்தாபனத்தில் நவீன நாகரீகத்திற்கேற்றவாறு பலரக பார்டர்களுடனும் கவர்ச்சிகரமான அமைப்புடனும் சேலைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இவரது உழைப்பால் வளர்ந்து நிற்கும் ஸ்தாபனங்கள் கே. எஸ். வீ & கோ, வீகோ புராடெக்ட்ஸ், வீகூ சன்ஸ், வீரா மோகன், வீராம் டெக்ஸ், கே. எஸ். வீ. கம்பெனி & வீகோ சில்க் கம்பெனி ஆகிய ஸ்தாபனங்களில் முதல் இரண்டில் தயாராகும் கைத்தறிச் சேலைகள் இந்தியா பூராவும், மற்ற வெளி நாடுகளிலும் பாராட்டப்பட்டு வருகின்றன.

பொது வாழ்க்கையில் எளியவர் இவர் எளியவர்களின் நண்பராக பலருக்கும் உதவியளித்து வருவதால் இவரது உள்ளம் கண்டோர் "வள்ளல்" என வாழ்த்துகின்றனர். நூற்றுக்கணக்கான நெசவாளர்களுக்கு வழிகாட்டியாகவும் அவர்கள் நல்வாழ்விற்கு காரணமாகவும் உள்ளவர். கோவை தேவாங்க உயர்நிலை பள்ளி பொருளாளராகவும் நிர்வாக கமிட்டி மெம்பராகவும் விவேகானந்தர் இல்லம் ஸ்தாபன மெம்பராகவும், பள்ளி மாணவ பெற்றோர் சங்கத்தின் பொருளாளராகவும் சமரச சுத்த சன்மார்க்க டிரஸ்ட் கமிட்டி மெம்ராகவும், ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி, புது சௌதாம்பாள் தேவஸ்தானம் பொருளாளராகவும் தெய்வீக பேரவை கமிட்டி காரியதரிசியாகவும் அருள் ஜோதி ராமலிங்க மிஷன் கோவைக்கிளை ஜில்லா தலைவராகவும் பல பதவிகள் வகித்து வருகிறார்.

இவரது ஸ்தாபனத்திற்கு உயர்தர உத்தியோகஸ்தர்களும் பிரபல வியாபாரிகளும் நேரில் வந்து பார்வையிட்டு பாராட்டி சான்றிதழ் வழங்கியுள்ளார்கள் இவரது ஸ்தாபனத்தின் வெள்ளி விழா 1969 - ஏப்ரல் மாதத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. இவரது மூத்த புதல்வர் திரு. சி. வி. மோகனசுந்தரம் பல தொழில் ஸ்தாபனங்களை நிர்வகித்து வரும் தொழிலதிபர். இரண்டாவது புதல்வர் டாக்டர் சி. வி. ஷண்முகம் ஆவர். மூன்றாவது புதல்வர் திரு சி. வி. சுப்ரமணியம் எலெக்டிரிகல் எஞ்ஜினியர் ஆவர்.

....

ஸ்ரீ ஏ. ஒய். எஸ். பாசுத்தநாடார் எம். எல். ஏ. தஞ்சாவூர். தோற்றம் 1909 பழம்பெரும் முக்கியஸ்தரான இவர் இரக்க மனதோடு நீண்ட காலமாகப் பலருக்கும் உதவிகள் செய்து வருபவர். பல பொது ஸ்தாபனங்களில் பதவி வகித்தவர். தமிழ் நாடு சட்ட சபை உறுப்பினராக 1946-62 வரையிலும், 1967 முதல் தொடர்ந்து பதவி வகித்து வருபவர். தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ் டைரக்டராகவும் சாரணர் சங்கத்தின் மாகாண உதவி கமிஷனராகவும் சென்னை மாகாண ஒய். எம். சி. ஏ. தலைவராகவும், தஞ்சை ஜில்லா பனை வெல்ல கூட்டுறவு பீடரேஷன் தலைவராகவும் பதவிகள் வகித்து வருகிறார். வான ஊர்தி பைலட் லைசென்ஸ் பெற்றவர்

....

ஜனுப் கே. முகம்மது இப்ராகீம் கும்பகோணம். வணிகர் தோற்றம் 1913 பல பொதுத் தொடர்புகள் உள்ளவர் குடந்தை வரி செலுத்துவோர் சங்கம் தலைவர் மாவட்ட மக்கள் நலமன்றம் பொதுச்செயலர் முஸ்லிம் மகா சபைச் செயலர் நகர சுதந்திராகட்சி செயற்குழு உறுப்பினர் டிராபிக் ஆலோசனைக் கமிட்டி மெம்பர் பொது நலன் கருதி கூட்டங்களில் நல்ல கருத்துக்களை எடுத்துரைப்பவர். பேச்சாளர்.

ஸ்ரீ அ. அப்பாவுத்தேவர், உக்கடை தஞ்சை ஜில்லாவில் பல பரம்பரையாக முக்கியப்பட்ட நிலப்பிரமுகர்கள் குடும்பம் ஸ்ரீ தேவர் 8.1-1908-ல் பிறந்தவர் பல் வேறு நற்பணிகள் செயல்பட தாராள மாக நிதிஉதவியளித்து வருபவர் பூதான இயக்கத்திற்கு 60 ஏக்கர் நிலம் எளியவர்களுக்கு தானம்கொடுத்தவர் தமது பெயராலும் தமது புதல்வர் ஸ்ரீ அ. விஸ்வநாத தேவர் பெயராலும் டிரஸ்ட் ஒன்று ஏற்படுத்தி, ஒரு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளவர் உக்கடை ஸ்ரீ ஜானகி அம்மாள் பெயரால், அனாதைக் குழந்தைகளுக்கான பள்ளி உக்கடை அம்பாள் பெண்கள் உயர் நிலைப்பள்ளி (தஞ்சை) அம்மாபேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகிய கல்வி ஸ்தாபனங்களின் தலைவர் திருவாரூர் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டி தலைவர் தஞ்சை கூட்டுறவு வீடு அடமான பாங்கியின் தலைவர் அன்புள்ளம் நிறைந்த வள்ளல் திரு அப்பாவுத் தேவரின் சஷ்டியப்த பூர்த்தி விழா 5-1-68-ல் வெகு சிறப்பாக நடைபெற்றது

....

இளைஞர். குடந்தை வர்த்தக சபை, நகர வரி கொடுப்போர் சங்கம், சினிமா ரசிகர்கள் சங்கம், ஆகியவைகளின் காரியதரிசி. சமயப்பற்றுடன், ஆண்டுக்கொருமுறை ஆவணி மூல விழா, காவிரிப் பொங்கல் விழா, போன்ற விசேஷாதிகளைச் சிறப்பாக நடத்தி வருகிறுர்.

திரு வி. பி.ஆர். கங்காராம் துரைராஜ்
தலைவர், மதுரை ராமநாதபுரம் வர்த்தக சபை, மதுரை.

திரு ஜெட்டாலால் சோலனகி
காரியதரிசி, மதுரை ராமநாதபுரம் வர்த்தக சபை, மதுரை.

திரு எஸ். சுந்தரமூர்த்தி
காரியதரிசி, மதுரை ராமநாதபுரம் வர்த்தக சபை மதுரை.

ஸ்ரீ வீ, பார்த்தசாரதி
AE. DIP., M.V.T. C & G (London)
பொறையார் ஸ்ரீ சக்தி விலாஸ் பஸ் சர்விஸ் உரிமையாளர்- பல்லோர் நல்வாழ்வுக்கு வாரிப்பொருள் வழங்கிய வள்ளல்,

திரு ஏ. ஆர். ராமசாமி கும்பகோணம் தோற்றம் 1916 ஏ. ஆர். ஆர். சீவல் பாக்டரியின் உரிமையாளர் நகரில் முக்கிய பிரமுகர் சென்னை சட்டசபை முன்னுள் மெம்பர் பல பொது ஸ்தாபனங்களில் பதவி வகித்தவர் தஞ்சை ஜில்லா சிறு தொழில் அபிவிருத்தி சங்கம், கும்பகோணம் வீடு அடமான சங்கம், தமிழ்நாடு வர்த்தகக் கழகம், ஆகியவைகளின் தலைவராகவும் பதவிகள் வகித்து வருகிறுர்

கும்பா. ஆர். எம். என். பார்த்தசாரதி திருபுவனம். (வழி) திருவிடைமருதூர். பட்டு ஜவுளி உற்பத்தியாளர். பட்டு ஜவுளி வியாபாரத்தில் பிரபல ஸ்தாபனங்களோடு நெருக்கமான தொடர்புள்ளவர் வர்த்தகத்தில் நாணயமாகவும் நேர்மையாகவும் மக்கள் நம்பிக்கைக்கு உகந்தவராகத் தொழில் நடத்தி வருகிறுர் உதார குணமும் தர்ம சிந்தனையும் உள்ளவர்.

திரு. பி. ஷண்முகம், கும்பகோணம் தோற்றம் 1921 வணிகர். சமிஷன் மண்டி பி. எஸ். ஸ்பெஷல் புளி தயாரிப்பாளர் புளி ஆராய்ச்சிப் பண்ணை என்ற பெயரில் புளியை சுத்தம் செய்து இயந்திரங்களின் மூலம் இறுக்கி பாக்கெட்களாக தயாரித்து விற்பனை செய்து வருகிறுர் வடநாடுகளில் விரிவாக சுற்றுப் பிரயாணம் செய்துள்ளவர் வடநாட்டு வியாபாரிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர் வணிக சமுதாயத்தினர் மேம்பாடு அடைய வழிகாட்டியாக அறிவுத்திறன்கொண்டு ஆற்றும் பணியால் உயர்வுபெற்று பலரும் பாராட்ட பொதுமக்களிடையே நன்மதிப்புபெற்று வாழ்க்கை நடத்தி வருகிறுர் தாம் அரும்பாடுபட்டு வளர்த்த தமிழ்நாடு வர்த்தகக் கழகத்தின் பொதுச் செயலாளராக பல நற்பணிகள் செய்து வருகிறுர் தமது தொழிலால் பல்லோர் நலனைப் பேணிக் காத்துவரும் கொடையாளியாக திகழ்பவர்

உறுதி யேற்போம்!

திரு. பி. கே. டி. ஷண்முகம், குடந்தை வர்த்தக சபை கும்பகோணம்,

வளர்ந்து வரும் ஜன நாயக அமைப்பிற்கும்; பெருகிவரும் மக்கட் சமுதாயத்திற்கும்; பரவலான பொருளாதார வளர்ச்சிக்கும்; வர்த்தகமும், தொழில்துறையும் இன்றியமையாததாகும்! இணையில்லாத தாகும்!!

வணிகத்துறையினர்களும், தொழில் துறையினர்களும், நாட்டிற்கு, இந்த தேசத்திற்கு, உயிர் நாடிப் போன்றவர்கள்! பொருளாதார பெருக்கத்திற்கு முன்னோடியாக திகழ்பவர்கள்!!

சிறந்த வாணிபமும், சீரிய தொழில் வளமும், நாட்டின் அபிவிருத்தியை அளந்து காட்டும் அளவுகோலாகும்!!

வர்த்தகம் மற்றும் தொழில்துறையில் ஈடுபட்டு நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் அயராமல், மனம்தளராமல் பணி புரிந்து வருகின்றவணிகர்களின் பாங்கான சேவையும் தொழிலதிபர்களின் ஆர்வம் மிகுந்த தொண்டும், பாராட்டக் கூடியதாகும்! புகழ் மணக்கத்தக்கதாகும்

முயற்சியை துணைகொண்டும் மன உறுதியை திடமாக நம்பி, நேர்மையை முதலீடாக வைத்து நாணயத்துடன் தொழில் நடத்திவரும் வர்த்தகர்களின் சேவை தியாக மனப்பான்மை மிகுந்ததாகும் தொண்டுள்ளம்கொண்டாகும்! தியாக மனப்பான்மையும், தொண்டுள்ளமும் கொண்ட வணிகர்களிடையே, தொழிலதிபர்களிடையே மன நிம்மதியில்லை! மன நிறைவுமில்லை!!

விற்பனை வரிச் சட்டம்!
வருமான வரிச் சட்டம்!
கடைச் சிப்பந்தி சட்டம்!
மத்திய விற்பனை வரிச் சட்டம்!
எடை அளவு லைசென்ஸ் சட்டம்
பில்டிங் லைசென்ஸ் சட்டம்!

போன்றவைகளோடு வணிக சமூகத்தினர்கள் அனுதினமும் போராடுகின்றார்கள்

அரசினரின் தவரான பொருளாதாரகொள்கை விற்பனை வரி அதிகாரிகளின் அநீதமான நடவடிக்கைகளும்; வர்த்தகம் மற்றும் தொழில் துறையில் குறுக்கிடுகின்றன இக்குறுக்கீடுகளினால் வர்த்தக சுதந்திரம் நசுக்கப்படுகின்றது, வணிகர்களின் உரிமை பறிக்கப்படுகின்றது! விற்பனை வரிச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள்; கலப்படத்தடைச் சட்டத்தில் உள்ள சீர்கேடுகள் ஏதுமறியாத வர்த்தகர்களை சூது வாது புரியாத வணிகர்களை தனது வாழ்வுக்காகப் போராடும் வியாபாரிகளை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்திவிடும் கொடுமையைக் காண்கிறோம் சட்டத்தின் கொடுமையிலிருந்து விடுபட விடிவு காலமே பிறக்காதா! முடிவு காலமே கிடைக்காதா! வர்த்தக சுதந்திரம் மலராதா என ஏங்கி நிற்கின்றனர் எப்போது நல்ல காலம் பிறக்கும் என காத்து நிற்கின்றனர்

வணிகர்களை பாதிக்கும் சட்டங்கள் பற்றி; தொழிலதிபர்களைத் தேக்கி நிறுத்தும் சட்டங்கள் குறித்து: வரி உயர்வால் ஏற்படுகின்ற கஷ்டங்கள்பற்றி; அரசினரின் திடீர் உத்திரவுகளால் ஏற்படுகின்ற நெருக்கடிகள் குறித்து; வணிக சமுதாயத்தினர் நீண்ட நாட்களாகவே வலியுறுத்தி வருகின்றனர். தங்கள் தங்கள் சங்க அமைப்புகள் மூலமாக அரசினரைக் கேட்டுக்கொண்டு வருகின்றார்கள்; மாநாடு கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பி வருகின்றார்கள்

எனினும் அரசினரின் கவனம் நம்மிடம் திரும்பவில்லை; ஆறுதல்கூறக்கூட அவர்களுக்கு மனம் வரவில்லை.

காலம் வரும் என்று காத்திருந்தோம் வேளை நாடி வரும் என நம்பி இருந்தோம் ஒவ்வொரு நிதியாண்டு தோறும் அரசின் விழி திறக்கும்; அப்போது வழி பிறக்குமென எதிர்பார்த்திருந்தோம்.

வரிகள் உயர்ந்தது! ஆனால் நமது கோரிக்கைகள் நிறைவேற இல்லை; பொதுமக்களிடம் வந்து வரியை வசூலித்துத் தரும் கௌரவ பில்கலெக்டர்கள் போன்றவர்கள் இவர்கள்! இதில் பதட்டம் ஏன்? தவக்கம் ஏன்?

அரசு வணிகர்களைப் பார்த்து இவ்வாறு பதில் கூறுகின்றது.

அரசுக்கு எதிரானவர்கள் அல்ல நாம்! மாறாக அரசின் கரத்தை வலுப்படுத்துபவர்கள்; இதை நாடு அறியும்! அரசு வெளியிடும் கடன் பத்திரங்களா! அரசு அதிகாரிகள் கேட்கும்போதெல்லாம் முகம்கோணாமல்; மனம் வெதும்பாமல் முதலீடு செய்திருக்கின்றோம்! பொது நிதிக்கு நிதியா! இருகரம் நீட்டி நாடி வருபவர்களுக்கு இதய சுத்தியோடு அள்ளித்தந்திருக்கின்றோம். ஆனாலும் நமது கோரிக்கைகளை ஆதரிப்பார் யாரும் இல்லை; ஆதரவு தருவார் எவருமில்லை: ஆறுதல் கூறுவோர்ஒருவருமில்லை!

வணிகத் துறையிலே நமக்கிருக்கும் கஷ்டங்கள்; தொழில் துறையிலே நமக்கு இருக்கும் தொல்லைகள்; கேட்டார் யாரும் இல்லை; பரிவோடு விஜாரிப்போர் யாருமில்லை

நம்மவர்கள் ஆதரவு பெற்றவர்கள் நம்மவர்களின் பேருதவியை அடைந்தவர்கள் நம்மைப்பற்றி ஒருபோதும் சிந்திப்பதில்லை அரசின் கவனத்திற்கு நமது நீண்டநாளைய கோரிக்கைகளைக் கொண்டுசெல்ல வணிகர் சமுதாயத்தினர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் உரிமைக்குரல் எழுப்ப உறுதி மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை

ருசி மிகுந்த
கிருஷ்ணா பிஸ்கட்ஸ்

உயர்தர
பிஸ்கட்ஸ், கேக், ரொட்டி,
கிருஷ்மஸ், நியூஈயர் கேக்,
தயார் செய்பவர்கள்.

கிருஷ்ணா பிஸ்கட் பாக்டரி
ரெயில்வே ரோடு
கும்பகோணம்.

விற்பனை வரிச்சட்டத்தை எளிதாக்குக
உத்தேச வரி விதிப்பை கைவிடுக!
சோதனையிடும் முறையை பின் பற்றாதே
வரி விகிதத்தை குறைத்திடுக!
வர்த்தக சுதந்திரம் வேண்டும்;
வணிகர்களின் உரிமையை பறிக்காதே
இதுவே நமது கோரிக்கை;
இதுவே நமது இலட்சியக் குரல்;
இதுவே நமது தாரகமந்திரம்.

இருபதாண்டு காலமாக வலியுறுத்திடு இவ் வேண்டுகோளை அரசின் கவனத்திற்கு எடுத்துரைக்க உறுதியேற்போம்,

வணிகத்துறை மூலமாக சுமார் 70 கோடி ரூபாய்வரை விற்பனை வரியாக வாரி வழங்கிடும் வணிகர் சமூகத்தினர்களுக்கு வஞ்சனை புரிகின்றது.

வர்த்தக . பேரங்களில் ஈடுபடும் பொதுமக்களில் சுமார் 80 சத விகிதத்தினர்

கள் வரி கொடுக்க மறுக்கின்றனர் ஆனாலும் நமக்குக் கிடைக்கும் சிறு ஊதியத்திலிருந்து தான் நாம் வரியைச் செலுத்தி வருகிறோம் இருந்தும் வரியை ஏய்ப்பவர்கள் இவர்கள் என இழிச்சொல் விசுகின்றனர்.

விற்பனை வரிச்சட்டத்திலுள்ள புரியாத விதிகள் காரணமாக ஏற்படக் கூடிய சிறிய தவறுகளை பெரிதாக்கி பழிச்சொல் கூறுகின்றனர்.

அவல நிலை நமக்கு; கவலை என்று தீரும் என்ற துயரம் நம்மவர்களுக்கு. எனவேதான் வணிகர் சமூகத்தினர்கள் ஒரே அணியின்கீழ் அலை அலையாக அணி வகுத்து நிற்கவேண்டும். தலை நிமிர்ந்து குரல் எழுப்ப வேண்டும். வர்த்தக சுதந்திரம் பெற்றிடுவோம். அதற்காக எத்தகைய தியாகத்தையும் சிரமேற்கொள்வோம் என நாமனைவரும் உறுதி யேற்போம்.

....

மங்கள் சமுதாயத்தில் குற்றம் செய்யாதவர்கள் இருக்கவே முடியாது; பிறருக்குத் தெரியாமல் வேண்டுமென்றே ஒளி மறைவாக செய்பவை தவறுதான்! வாணிபத்தில் தவறுகள் செய்வது சகஜம் தவறுகள் செய்வோர் யாவரே யாயினும் தான் செய்வது குற்றமென்பதை யேற்றுக்கொள்ளமாட்டார்கள்! பேச்சுத்திறது கொண்டு சாமர்த்தியமாக சாதித்துப் பேசுபவர்களிடம் வாதிப்பதை சுருக்கிக்கொள்வது நல்லது; உனது தூண்டுதலால் அவனது உள்ளம் அவனை குற்றம் காட்டுகிறது. அவனது உள்ளுணர்ச்சியிடமிருந்து அவன் தட்டமுடியாது ஒரு குடும்பத்தை சம்ரட்சிக்க; தன்னுயிரைக் காப்பாற்றிவதற்கு வேறு வழியே இல்லாதுபோனல் செய்யப்படும் தவறுகள் பொறுக்க வேண்டியதே; ஆனல் ஆசையும் பேராசையும் பெரும்பாலோரிடம் பிறவி குணமாக அமைந்திருக்கின்றதே!

டாக்டர் அமீனதீன் அவர்களின்

அற்புத சிகிச்சை!

மூலநோய், பவுத்திரம், வெண்குஷ்டம், மேகரோகம் நீரழிவு. சோகை யானைக்கால், முதலிய வியாதிகள் குணப்படுத்தப்படும்.

டாக்டர் ஜி. எஸ், அமீனதீன்

ஹோமியோ & பயோ கிளினிக்

ரெயில்வே ரோடு : கும்பகோணம்

ஸ்தாபிதம் : 1950. **போன் : 623.**

T.S.S. பண்ணை பிரைவேட் லிமிடெட்,

(ரிஜிஸ்டர் நம்பர் 113/49-50)

தலைமை ஆபீஸ் :

820 கீழ அலங்கம் தஞ்சாவூர்.

கிளை : பட்டம் சந்து, கும்பகோணம்

KH சேவிங்ஸ் ஏல சீட்டு

மாதம் ரூ. 5. வீதம் 20, 25, 30. 40, 50, மாதம் செலுத்தி கூடுதலாக பணம் பெறலாம் 40 மாத சீட்டுதாராகி. ரூ, 15 செலுத்தியவர் ஏலத்தில் கலந்துகொண்டு விதிகளின்படி பணம் பெறலாம். விவரங்கட்கு R, தியாகராஜசெட்டியார்,

With the best campliments of :

WE SERVE WE GROW

ஸ்ரீ சக்திவிலாஸ்பஸ் சர்விஸ்

பொறையார்

உரிமையாளர்,

ஸ்ரீ வி. பார்த்தசாரதி,
AE. DIP., M.V.T. C & G (London

ரிஜிஸ்டர்டு நெ. 111863.

தந்தி : ஸ்வஸ்திக்.
போன் : 22.

எமது ஆதரவாளர்களுக்கு
எங்கள் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

ஸ்வஸ்திக் வேதாரண்யம் புகையிலை

சேல்ஸ் டெப்போ :
559 பூந்தமல்லி ஹைரோடு,
மதராஸ்-3
போன் நெ 34913.

தயாரிப்பு :
ஸ்வஸ்திக் வேதாரண்யம் புகையிலை
வேதாரண்யம்.

தாம்பூலத்திற்கு தரமான "ஏ. ஆர். ஆர்." சீவல்
கிடைக்கும்போது
தரக்குறைவான "சீவல்" வாங்கவேண்டிய
அவசியம் என்ன?
எப்போதும்

ஏ. ஆர். ஆர். சீவலை

உபயோகியுங்கள்

தாம்பூலத்திற்கு
சிறந்தது!

A.R.R.SEEVAL
ஏ.ஆர்.ஆர்.சீவல்

தயாரிப்பாளர் : ஏ. ஆர். ராமசாமி
ஏ. ஆர். ஆர். சீவல் பாக்டரி
கும்பகோணம்

குறிப்பு : எங்களது மற்றொரு தயாரிப்பு
"வாசனை சுண்ணாம்பு."

போஸ் கலப்பைகள்

போஸ் கலப்பைகளை முதலாவதாக இந்நாட்டிற்கு வழங்கியது எமது ஸ்தாபனமே என்ற விஷயம் தாங்கள் அறிந்ததே.

கடந்த 21 வருடங்களாக இப்பணியில் ஈடுபட்டுள்ளோம். நஞ்சை நிலங்களில் உழுவதற்கு சிறந்தது எமது 303 நம்பர் போஸ் சூப்பர் கலப்பையும், 303 நம்பர் போஸ் ராக்கட் கலப்பைகளுமே இதற்கு ஈடு இணை வேறெதுவுமில்லை இவையேதான்.

மேலும் தங்களுக்கு உறுதிமிக்கதும், நீடித்து உழைக்கக்கூடியதுமான "போஸ் கலப்பைகளை" உற்பத்தி செய்வதில் தேவர் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு, தற்சமயம் அயல்நாடடுத் தொழில் நிபுணர் மேற்பார்வையில் சிறந்த கலப்பைகள் தயார்செய்து வெளிவந்துகொண்டிருக்கின்றன என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

துவக்கம் 1948.



தந்தி : தேவர்.

எமது ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க் "போஸ்" என்ற வார்த்தையையும் '3' '33' '303' நம்பர்களையும் கவனித்து வாங்குங்கள்.

வி. எம். தேவர் & சன்ஸ், மேலூர். (மதுரை ஜில்லா)

உயர்ந்த பட்டு ஜவுளிகளுக்குச் சிறந்த இடம்!

கும்பா

ராம. நா. ஸ்ரீநிவாஸன் & ஸன்ஸ்,
பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்,
திருபுவனம். (VIA) திருவிடைமருதூர்.

YOU WILL ENJOY PICTURES AT THEIR BEST

PANDIAN TALKIES
NEGAPATINAM.

Equiped with uptodate latest model R. C. A sound system
FITTED WITH

CINEMA-SCOPE

THE LARGEST SIZE IN INDIA

PROPRIETORS
A. D. JAYAVEERAPANDIA NADAR & BROS
Negapattinam

உயர்ந்த பட்டு ஜவுளிகளுக்குச் சிறந்த இடம்!

கும்பா

ராம. நா. பார்த்தசாரதி & ஸன்ஸ்,

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்,

திருபுவனம் (Via) திருவிடைமருதூர்.

பட்டு ஜவுளி வியாபாரத்தில்

முன்னணியில் நிற்பது!

எங்கள் ஸ்தாபனம்.

குமார் ஸில்க் ஹவுஸ்,

சன்னதித் தெரு, திருபுவனம். (வழி) திருவிடைமருதூர்.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும்

விற்பனை செய்து வருகிறோம்.

தந்தி : சாந்தி

போன் : 19.

சுத்தமான புளி வேண்டுமா ?

கடைக்காரர்களிடம் கேட்டு வாங்குங்கள் !

25 வருட அனுபவத்தில் தயாரிக்கப்பட்டது

P.S. ஸ்பெஷல் புளி

P.S. புளி ஆராய்ச்சிப் பண்ணை

சக்ரபாணி தெற்கு வீதி

கும்பகோணம்.

REGDNO. M 6545

P.R.N.

தந்தி : BONTEX

(ஜவுளி) திருச்சி.

தங்களுக்குத் தேவையான பட்டுப் புடவைகள், நூல், பம்பர், கோடம்பாக்கம், ஆரணி சேலைகள், வேஷ்டி ரகங்கள் மில் கோட்டிங், ஷர்ட்டிங், வாயில் லான், வகைகள் சில்க் தினுசுகள், எல்லாம் கிடைக்கும் ஒரே இடம்!

P. R நாராயணசாமி அய்யர்

பெரிய கடைவீதி P. B. 401 திருச்சி -8

எங்களிடம் மொத்தமாகவும் ஜவுளிகள் கிடைக்கும்.

P.R. நாராயணசாமிஅய்யர் & கோ ஜவுளி வியாபாரம்

கண்ணன் பஜார், காரைக்குடி

எங்கள் மற்ற நிறுவனங்கள் :-

P. R. N. AGENCIES.
DISTRIBUTORS & STOCKISTS
SHAKTI SILKS,

P. R. N. ENTERPRISES,
INTENTING AGENTS FOR :
SREE SHAKTI MILLS, LTD.,

38, KOLLMETTU STREET, TRIGHY - 2

P. R. N TEXTILES, Big Bazar street. Trichy - 8
(Approved Show Room of the Mafatlal Groupof Mills)

Printed & Published by [illegible] AT HIS OWN PR PRESS AT
4, Kamashi Amman Agraheram, Thanjavur